REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 348 ஐப்பசி 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 13 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா சாவு 48

மேலும் இருவர் பலி

நேற்றும் 373 பேருக்குத் தொற்று 18 ➤

# தீபாவளியை அமைதியாக வீட்டிலிருந்து கொண்டாடுங்கள்

## இந்து மதத் தலைவர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 13

நாளைய தினம் தீபாவளியை வீடுகளிலிருந்து இறைவனைப் பிரார்த்தித்து கொண்டாடுங்கள். கொடிய கொரோனாநோயிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்று இறைவனை வேண்டி வீட்டிலிருந்து அமைதியான முறையில் கொண்டாடுங்கள் என இந்து மதத்தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். 18 ➤



## களமிறங்கிய ட்ரோன் படை: 15 பேர் சிக்கினர்!!

கொழும்பு, நவ. 13

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் விதிமுறைகளை மீறினர் என 15 பேர் ட்ரோன் கமராக்களின் உதவியுடன் நேற்று 18 ➤

## கலைப்பீட மோதல்: விசாரணை முடிவு

*உச்சபட்ச தண்டனைக்கு பரிந்துரைப்பு*

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் கடந்த மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்ப 18 ➤

## விடுதலைப் புலிகள் மீது தடை தொடரவேண்டும்

*பிரிட்டனுக்கு இந்தியா கடும் நெருக்குதல்*

டில்லி, நவ. 13

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்கக்கூடாது. அந்த அமைப்பு மீதான தடையைத் தொடர வேண்டும் என்று பிரிட்டனிடம் இந்தியா வலியு 18 ➤



*முச்சந்தி முரளி*

"தீபாவளிக்கு தீர்வு வருகுதெண்டு சொல்லிச் சொல்லி, இந்த முறை தீபாவளியே இல்லாமல் போச்சு பாருங்கோ"



## கடன்பொறிக்குள் இலங்கை சிக்கும்

*சம்பிக்க எதிர்வுகூறல்*

கொழும்பு, நவ. 13

குறுகிய கால கடன்களால் வெகுவிரைவில் நாடு கடன் பொறிக்குள் சிக்கவுள்ளது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். 18 ➤

## மன்னார் மாவட்டச் செயலராக திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல்



மன்னார், நவ. 13

மன்னார் மாவட்ட புதிய மாவட்டச் செயலராக திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 18 ➤

## தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை கவிழ்ந்தது சுதந்திரக் கட்சி

*செட்டிகுளம் சபையின் பாதீடு தோல்வி*

வவுனியா, நவ. 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆளுகையில் உள்ள வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மேலதிக இரு வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 4 உறுப்பி 18 ➤

## உணவருந்திய சிறுவனின் உயிரைப் பறித்த சுவர்!



கிளிநொச்சி, நவ. 13

கிளிநொச்சியில் தற்காலிக வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் நிரோயன் ருசாந்தன் (வயது 8) சிறுவன் உயிரிழந்தான். தொடர்ச்சி 18 ➤

## கொரோனா சாவு 5 பேர் மட்டுமே!



ஏனையோர் நாள்பட்ட நோய்களால் என்கின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, நவ. 13

இலங்கையில் 5 இறப்புக்கள் மாத்திரமே கொரோனாவால் ஏற்பட்டவை என 18 ➤

## பூஸா சிறைக்குள்ளும் புகுந்தது கொரோனா

*சிறைச்சாலைக் கொத்தணி 161*

கொழும்பு, நவ. 13

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் மூவருக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. வெலிக்கடை, போகம்பர, மாத்தறை மற்றும் 18 ➤

## ஊஞ்சல் கயிற்றில் சிக்கி சிறுமி சாவு



யாழ்ப்பாணம், நவ. 13

ஊஞ்சல் கயிற்றில் சிக்கி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி நேற்று உயிரிழந்துள்ளார். 17 ➤

# ஒரு லட்சம் காணித்துண்டுகள் தமிழர்களே சுதாகரியுங்கள்!!!

## *சிங்களக் குடியேற்றத்தை தடுக்க ஐங்கரநேசன் அழைப்பு*

யாழ்ப்பாணம், நவ. 13

**நாடு அபிவிருத்திப் பாய்ச்சல் ஒன்றுக்குத் தயாராகின்றது என்பது போலத் தோற்றத்தைக் காட்டிக்கொண்டு சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கான முன்னேற்பாடு இடம்பெறுகின்றது என்று கருதவேண்டியுள்ளது. தமிழ்த்தரப்பு சுதாகரிக்காதுவிடின் எஞ்சியுள்ள நிலமும் பறிபோகும் அபாயம் உள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



இளம் தொழில் முனைவோருக்கு ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கும் திட்டம் குறித்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களில் அரசுகள் மேற்கொண்ட காணிப் பங்கீடுகள் யாவும் அபிவிருத்தி என்ற பெயரில் இடம்பெற்ற சிங்களக் குடி யேற்றத் திட்டங்களே. கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கல்லோயாத் திட்டம், அல்லை கந்தளாய்த் திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக அரசு அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழ் சிங்கள மக்களின் இன விகிதாசாரத்தையே மாற்றி அமைத்துள்ளது.

சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிகளில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டாலும், அரசு சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் பச்சை யுத்தம் ஒன்றைத் தொடுத்துப் பாரியளவு நிலப்பரப்பைப் பறித்து வைத்துள்ளது.

காடுபேண் கட்டளைச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 5 இலட்சம் ஏக்கர்கள் புதிய ஒதுக்குக் காடுகளாகவும், மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சம் ஏக்கர்கள் புதிய பேணற் காடுகளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

வன உயிரிகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் நாகர் கோவில், நெடுந்தீவு சரணாலயங்களும் மன்னார் மாவட்டத்தில் மடு வீதி சரணாலயங்களும் சுற்றியற் பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டு ஏறத்தாழ இரண்டே முக்கால் இலட்சம் ஏக்கர்கள் அளவில் தேசியப் பூங்காக்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றினுள்ளும் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த குடியிருப்பு பகுதிகளும் வயற்காணிகளும்; அடங்கியுள்ளன.

மகாவலி அதிகார சபை, வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவற்றால் அரசு பறித்த தங்கள் பூர்வீக நிலங்களை மீளத்தருமாறு கோரிப் பொது மக்கள் போராட்டங்களை நிகழ்த்தி வரும் நிலையிலேயே அரசு தொழில் முயற்சியின் பெயரால் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

இத் திட்டத்தில் தமிழ் மக்கள் தங்களை இணைத்துக்கொள்ளாவிடின் அரசு மறைமுகமாக முன்னெடுக்கவிருக்கும் நிகழ்ச்சி நிரலை வெளிப்படையாகவே முன்னெடுக்கும் நிலை தோன்றிவிடும். இதனைக் கருத்திற் கொண்டு, எங்களது நிலம் பறிபோகாதிருக்க அரசு அறிவித்துள்ள காணித்துண்டங்களுக்கு எம்மவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இவ் விண்ணப்பங்களின் பரிசீலனையின்போது தமிழ் மக்கள் கடந்த காலங்களைப்போன்று பேரினவாதத்தின் இனமூழ்கடிப்புக்கு ஆளாகாது இருப்பதை தமிழ்மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் எப்பாடுபட்டாயினும் உறுதி செய்தாக வேண்டும் - என்றுள்ளது. (ஒ.இ)

# யாழ். – கொழும்பு சேவையில் ஈடுபடுவோருக்கு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் - கொழும்பு அத்தியாவசியப் பொருள்கள் சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களின் வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான நடைமுறைகள், கட்டுப்பாடுகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் யாழ்ப்பாண வர்த்தக சங்க மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாகனங்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்டவர்களின் பெயர் விவரங்களுடன் வாகன உரிமையாளர்கள் அல்லது வர்த்தகர்கள் இந்தக் கூட்டத்துக்கு கட்டாயம் சமூகமளிக்க வேண்டுமென வர்த்தக சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரம் கோரியுள்ளார். (ஒ.20)

*குருநகரில்*

# எதிர்ப்பால் பின்வாங்கியது யாழ்ப்பாணம் மாநகர சபை

யாழ்ப்பாணம், நவ. 13

குருநகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களை அகற்றும் முயற்சி அந்தப் பகுதி மக்களின் எதிர்பால் நேற்றுக் கைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் பரிந்துரைக்கு அமைய யாழ்ப்பாணப் பொலிஸாரின் பாதுகாப்புடன் வடிகாலுக்கு மேலாக சட்டவிரோதமாக அமைக்க ப்பட்ட வீடுகள் மற்றும் கடைத் தொகுதிகளை அகற்ற மாநகரசபை ஊழியர்கள் பெக்கோ இயந்திரத்துடன் வருகை தந்த போதிலும், அந்தப் பகுதி மக்கள் அவற்றை அகற்ற தமக்கு உரிய காலம் வழங்கப்பட வேண்டுமெனவும் மழை காலத்தில் தாம் மாற்று வழிகளை ஏற்படுத்த முடி யாது எனவும் குறிப்பிட்ட கால அவகாசம் தரப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

மாநகர சபையினர் மக்களின் கோரிக்கையை ஏற்றதுடன், அந்தக் காலப் பகுதிக்குள் அகற்றாவிடின் தாம் இடித்து அகற்றுவோம் என்று குறிப்பிட்டனர். (ஒ.20)

# தீபாவளி கொண்டாட்டத்தை இம்முறை தவிர்ப்போம்!

## *கொரோனா வரமுன் காப்போம் என்கிறார் விக்னேஸ்வரன்*

யாழ்ப்பாணம், நவ. 13

கொரோனா எம்மிடையே பரவத் தொடங்கினால் அசௌகரியங்களுக்கு நாம் யாவரும் முகம் கொடுக்க வேண்டிவரும். இம்முறை தீபாவளியை வீடுகளில் இருந்தவாறு கொண்டாடுவதன் மூலம் ஒவ்வொருவரும் தங்களினதும் தங்களது இரத்த உறவுகள் மற்றும் நண்பர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அபாயகரமான சூழலில் கொண்டாட்டங்களை மட்டுப்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

வயது முதிர்ந்தவர்கள், சலரோகம், உயர் குருதி அமுத்தம் போன்ற நோய்களுடன் வாழ்பவர்கள், மற்றும் கர்ப்பவதிகளுக்கு கொரோனா நோயானது பெரிய ஆபத்தை விளைவித்து வருகின்றது.


ஒவ்வொருவரது வீடுகளிலும் வாழும் மேற்படி ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய உறவினர்கள், நண்பர்களது உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அவர்களுக்கு கொறொனா தொற்றாது பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

தீபாவளி தினத்தில் சுற்றத்தார், உறவுகள், நண்பர்கள் ஆகியோரின் வீடுகளுக்குச் செல்லுதல், புதிய உடுபுடவைகள் வாங்குதல், ஆபரணங்கள் வாங்குதல் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குக் கூட்டமாகச் செல்லுதல் ஆகிய வழக்கங்களைத் தவிர்த்தல் நலம் என்று நாம் கருதுகின்றோம்.

அவ்வாறு கருமங்களுக்குச் செல்லும்போது கொறொனாத் தொற்றுக்கு ஆளாக நேரிடலாம். எனவே கொண்டாட்டங்களைத் தவிர்ப்போம், என்றுள்ளது. (ஒ.இ)

# கூ.சங்கத்தை உடைத்து பொருள்கள் கொள்ளை!

கொடிகாமம், நவ. 13



அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுக்குச் சொந்தமான ஆவரங்கால் பகுதியிலுள்ள ஆவரங்கால் கிளை பலநோக்கு கூட்டுறவுக்குச் சங்கம் உடைக் கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம- 159)

*இறுதிச் சடங்கில்*

# சிறுபான்மையினரின் உரிமைகளை இலங்கை அரசு மதிக்க வேண்டும்!

## *சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை*

கொழும்பு, நவ. 13

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் இறுதிச் சடங்குகளை நடத்தும்போது, சிறுபான்மையின மதத்தவரின் உரிமைகளை மதிக்குமாறு அரசிடம் சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

கொரோனாவால் இறந்தவர்களை அடக்கம் அல்லது தகனம் செய்வதற்கு, உலக சுகாதார நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறும், சர்வதேச மன்னிப்பு சபை இலங்கை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தது. (ஒ.இ)

# மழைகாலம் ஆரம்பித்தவுடன் வெளிவருகின்றன துவக்குகள்

## *10 நாள்களில் 7 கட்டுத் துவக்குகள் சிலாவத்துறையில் மீட்பு*

மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட கட்டுத் துவக்குகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. மிருகங்களை வேட்டையாடுவதற்கு மழைகாலமே பொருத்தமான நிலையில் தற்போது அவை வெளிவர ஆரம்பித்துள்ளன என்று மன்னார் சிலா வத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 10 நாள்களில் 7 கட்டுத் துவக்குகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கட்டுத்துவக்கு ஒன்றுடன் பண்டாவெளியைச் சார்ந்த ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். அவர் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது அவருக்கு 2ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட கட்டுத் துவக்குகளை வைத்து, வேட்டையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-60)

# தொற்றா நோயாளர்களின் ஆயுள் கொரோனாவால் வீழ்ச்சியடையும்

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

**கொழும்பு, நவ.13**

**தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால், அவர்களின் ஆயுள்காலம் குறைய வாய்ப்புக்கள் அதிகம் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயம் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானால் அவர்களின் ஆயுள்காலம் 10 வருடங்கள் குறையக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

அதற்கமைய 60 வயது கடந்தவர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் வீடுகளில் உயிரிழப்பதற்கு அவர்களின் கவனக்குறைவே முக்கிய காரணம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## ஊடகவியலாளரைத் தாக்கிய மூவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரான எஸ். முகுந்தன் என்பவர் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை, வன்முறை கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாட்டில் கொரோனோத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் சுகாதார விதிமுறைகளைப் பேணாது தமிழ்க்கொடி எனும் அமைப்பு உதவி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது என குற்றஞ்சாட்டி, அது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தனது முகநூலில் நேற்றுமுன்தினம் பதிவிட்டிருந்தார்.

அந்தப் பதிவை நீக்கக்கோரி தமிழ்க்கொடி எனும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கடும் அழுத்தத்தைக் கொடுத்ததுடன் மிரட்டலும் விடுத்திருந்தனர். அதற்கு அவர் சம்மதிக்காத நிலையில் நேற்று அவரது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், அவரது தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் விமல் , கிஷோகுமார் மற்றும் ஜீவமயூரன் ஆகிய மூவரைக் கைது செய்துள்ளனர். (ற-26)

## தனியார் ஊழியர்களிடத்தில் அரசுக்குக் கரிசனையில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 13

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள தனியார்துறை ஊழியர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவில்லை. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒதுக்கீட்டு சட்டமூலம்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சி காலத்திலும், ஏன் போரின்போதும்கூட உரியவகையில் வரவு செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. இலங்கை அரசியல் வரலாற்றில் பட்ஜட் முன்வைக்கப்படாத ஆண்டாக அது அமைந்தது.

அதேபோல சுதந்திரத்துக்கு பின்னர் அரசாங்கமொன்றால் கடந்த வருடமே அதிக கடன் பெறப்பட்டுள்ளது. ஆனால் அதன்மூலம் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை. தங்க ஆபரணங்களை அடகு வைத்து வாழ்க்கையை கொண்டுசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடன் அட்டைகளுக்கான கொடுப்பனவுகளைக்கூட செலுத்துவதற்கு மக்களுக்கு வருமானம் இல்லை.

இலங்கையில் தனியார் துறையில் 60 லட்சம்பேர் பணிபுரிகின்றனர். இதில் 17 லட்சம்பேர் நாட் சம்பளத்தை நம்பியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் 50 வீதம், 75 வீதம் என சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது. முதலாம் அலையின்போது ஒரு லட்சம்பேர் தொழில் இழந்தனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அந்தத் தொகை மேலும் அதிகரித்திருக்கும். நிலைமை இப்படி இருக்கையில் தனியார்துறைமீது அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் ஆர்ஜென்டினா போன்ற நாடுகளில் அரசாங்கமே சம்பளத்தை வழங்கிவருகின்றது' என்றார். (ம-44)

## அம்பாறையின் அபிவிருத்தியில் கூட்டமைப்பு இணைய வேண்டும்

### கருணா வேண்டுகோள்

அம்பாறை, நவ.13

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேசத்தில் பிரதமரின் விசேட இணைப்பாளருக்கான அலுவலகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அம்பாறையிலிருந்து விரட்டியடித்து தனித்துவத்தைக் காட்டியுள்ளோம்.

நாம் நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழந்த போதிலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையை என்னை நம்பி பிரதமர் ஒப்படைத்துள்ளார். இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி மேலும் பல மாற்றங்களை இங்கு கொண்டு வருவேன். அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கு சகல அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும். இதனை ஒரு இனவாதமாக எவரும் பார்க்க கூடாது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## வீடு திரும்பியவர் மீது தாக்குதல்

சாவகச்சேரி, நவ.13

வேலை முடித்து திரும்பிய 32 வயது நபர் ஒருவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மந்துவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

# தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை விமர்சிக்கும் தகுதி சுரேனுக்கு இல்லை

### சி.வி.கே. சிவஞானம் பதிலடி

கொடிகாமம், நவ.13

அரசால் நியமிக்கப்பட்ட சுரேன் ராகவன் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எங்களுடைய கைதிகள் விடுதலை பற்றி பேசலாம்.

ஆனால் வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ் தேசியம் சார்ந்த அரசியல்வாதிகளின் செயல்பாட்டை விமர்சிக்கும் உரிமை அவருக்கு கிடையாது என வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவர் சிவிகே சிவஞானம் தெரிவித்துள்ளார்.



அண்மையில் இடம்பெற்ற அமரர் நடராஜா ரவிராஜின் நினைவு தினத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுரேன் ராகவன் தற்போது பல விடயங்கள் பேசுகின்றார் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை பற்றி பேசுகின்றார்.

நீதி அமைச்சரிடம் கேள்வி கேட்கின்றார் ஆளுநராக மைத்திரிபால சிறிசேனவு டைய முகாமையாளராக அந்த 8 மாத காலமாக இருந்த போது இதையெல்லாம் செய்யாமல், இன்னொரு ஆட்சி வந்ததன் பிறகு பேசுவதென்பது தமிழ் மக்களை ஏமாற்றும் வேலையாகவே இருக்கும். ஆளுநராகவும் அவருடைய செயற்பாடுகளில் நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன.

முக்கியமாக யாழ் குடாநாட்டுக்கான நீர் விநியோகம் சம்பந்தமான அவரது செயல்பாடு ஒரு விரயமான செயற்பாடாகவே அமைந்திருக்கிறது எனத் தெரிவித்தார். (வ-159)

## கொவிட் - 19 பயிற்சி வகுப்பு

# பங்குபற்றாத சாரதிகள் வர்த்தகத்தில் ஈடுபடத் தடை

### *மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எச்சரிக்கை*

**மன்னார், நவ.13**
**மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மீன் மற்றும் பொருள்கள் ஏற்றுமதி - இறக்குமதி செய்யும் சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளாதவர்கள், இவற்றில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாது என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவிக்கையில்,
கொவிட் - 19 தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, மன்னார் மாவட்டத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலில் ஈடுபடுபவர்கள் கட்டாயமாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
அதற்கமைவாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இவற்றில் ஈடுபடுகின்ற மன்னார் மாவட்ட சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்குமான பயிற்சி வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
இக் கூட்டத்தில் நூறு பேர் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், 12 நபர்கள் மட்டுமே கலந்துகொண்டிருந்தனர். இது எம் மாவட்டத்துக்கு ஆரோக்கியமானது அல்ல.
இப் பயிற்சியில் கலந்துகொள்ளாத சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பொருள்களை ஏற்றி இறக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். (ந-60)





வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம், வேப்பங்குளம், ரகுபாக்கம், சாளம்பைக்குளம், பம்பைமடு உள்ளிட்ட பகுதிகளில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட 93 குடும்பங்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தால் உதவித்திட்டங்கள் நேற்று வழங்கப்பட்டன. இதனடிப்படையில், முதல் கட்டமாக 5 ஆயிரம் ரூபா பெறுமதியான சீனி, அரிசி, பருப்பு உள்ளிட்ட உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ந- 18)

## பெரும்போக பயிர்ச்செய்கை; தீர்மானித்த திகதியில் மாற்றம்

மன்னார், நவ.13
பெரும்போக விவசாய நடவடிக்கையில் மாற்றம் செய்வது தொடர்பான கூட்டம் மன்னார் பதில் மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் மன்னார் பதில் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளதாவது,
கட்டுக்கரை குளத்தின் கீழ் பெரும்போகம் செய்வது தொடர்பில் முன்னர் மேற்கொண்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளது. அதையடுத்து மீள் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் திகதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, டிசெம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னராக நான்கரை மாதங்களைக் கொண்டதான நெற்பயிர்களை விதைக்க வேண்டும். மூன்றரை மாத இரண்டரை மாத பயிர்ச் செய்கைகளை டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் விதைக்க வேண்டும்.
ஏற்கனவே கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டு 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் விதைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கடைசி நீர் விநியோகத் திகதியாக மார்ச் மாதம் 21ஆம் திகதி ஆகவும், அறுவடை திகதி ஏப்ரல் முதலாம் திகதியாகவும் கால்நடைகள் மீள கொண்டு வரும் திகதியாக மே முதலாம் திகதியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-213)

## தொண்டு நிறுவனங்களால் இயற்கை வீட்டுத்தோட்டம்



கிளிநொச்சி, நவ.13
இயற்கை முறையில் பயிரிடுவதிலுள்ள பயன்களைக் கருத்தில் கொண்டு ஏழு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒரு நடைமுறைத் திட்டத்தை உருவாக்கியுள்ளன.



அந்தவகையில் புதிய வாழ்வு அறக்கட்டளை, சர்வதேச பரந்தன் பழைய மாணவர் சங்கம், கிளிநொச்சி மக்கள் அமைப்பு, ரட்ணம் அறக்கட்டளை, கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பு, விருட்சம், தாமரை ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்க ளால் இந்த நடைமுறைத் திட்டம் உருவாக்கப்பட்டது.
இத்திட்டத்துக்கு பரந்தனில், குமரபுரம், காஞ்சிபுரம், கமறிக்குடா ஆகிய கிராமங்களில் வாழும் 97 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களின் குடியிருப்புக்களில் பயிர்ச்செய்கைக்கு போதிய நிலம், நன்னீர் வசதி, பாதுகாப்புச் சுற்று வேலி மற்றும் சூரிய ஒளி ஆகியன உள்ளனவா என்பது உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டது. தேர்வான பயனாளர்களின் பயிர்ச்செய்கைக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்க ஒரு தகுதியும் அனுபவமும் கொண்ட முழுநேர அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார். இவர்களுக்கு வெண்டி, கத்தரி, தக்காளி,கறிமிளகாய், புடோல், பாகல், மிளகாய் ஆகியவற்றுடன் மஞ்சள், இஞ்சி, ஆகிய பயிர்கள் வழங்கப்பட்டதுடன் முருங்கை மற்றும் கீரை வளர்ப்பும் ஊக்குவிக்கப்பட்டது.(ற-222)

## மாட்டுடன் மோதிய மோ. சைக்கிள்: ஒருவர் காயம்

சாவகச்சேரி, நவ.13
நடுவீதியில் நின்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த 56 வயது நபர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு புதுக்காடு தாளையடி வீதியில் இடம்பெற்றது.
பளை மாசாரையைச் சேர்ந்த இந்த நபர், மோட்டார் சைக்கிளில் சென்றபோது வீதியின் குறுக்கே மாடு நின்றதை அவதானிக்காததால் அதனுடன் மோதி விபத்துக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-9)

## கிழக்கு பாதுகாப்பு படையினரால் கொவிட் - 19 செயல்பாட்டு நிலையம்

மட்டக்களப்பு, நவ.13
கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 23 ஆவது பிரிவு இராணுவத்தின் 231ஆவது பிரிகேட் படையினரால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான முதல் கொவிட் - 19 செயல்பாட்டு மத்திய நிலையம் நிறுவப்பட்டுள்ளது.
கொவிட் - 19 தொடர்பான எந்தவொரு சவால்களையும் முறியடிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள இம் மத்திய நிலையம் சுகாதார அதிகாரிகள், மாவட்டச் செயலாளரின் பிரதி நிதிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், படை வீரர்கள் மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள் ஆகியோரால் நிர்வகிக்கப்படுகிறது.



இந்த மத்திய நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந- ரி4)


தீர்வுகள் கண்டிட,
தீர்க்கமாய் வாழ்ந்திட...
தீபத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்
100 YEARS
COMMERCIAL BANK
www.combank.lk
உங்கள் நலனே எங்கள் நோக்கம்


20 இலட்சம்
செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்
Browns YANMAR
இணையில்லாத்
தொழில்நுட்பத்தினைக்கொண்ட உலகப்
புகழ்பெற்ற Browns YANMAR அறுவடை
இயந்திரம் HNB லீஸிங் இடமிருந்து
20 இலட்சம் செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்.
Browns
Agriculture
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் | 0773 457 988 - துஷான் 0773 457 987 - லக்ஷித

கடலுணவுகளால் கொரோனாவா?

## வதந்தி பரப்பியவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

*வடக்கு கடற்றொழில் இணையம் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், நவ. 13

கடலுணவுகளால் கொரோனா பரவும் என பொய்யான வதந்திகளைப் பரப்பியவர்களுக்கு எதிராக அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவர் க.சுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதி மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர். மீனவர்களின் பொருளாதாரம் ஏற்கனவே பல வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. இப்படியிருக்கையில் தற்போது புதிது புதிதாக வெவ்வேறு பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அண்மையில்கூட கடலுணவுகளால் கொரோனா பரவுகின்றது என்று வதந்தியொன்று பரப்பப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (ம-20)

# கடற்றொழிலாளர் பிரச்சினையில் அரசு அக்கறை காட்டவில்லை!

*வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் குற்றச்சாட்டு*



யாழ்ப்பாணம், நவ. 13

**கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் பாதிப்புக்கள் தொடர்பில் அரசாங்கம் அக்கறை எடுப்பதில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளார் வடக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் இணையத்தின் தலைவர் க.சுப்பிர மணியம்.**

மேலும் தமது பிரச்சனைகள் தேவைகள் மற்றும் பாதிப்புக்கள் உட்பட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேசுவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் தம்மைச் சந்திக்க அமைச்சர் மறுத்து வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் காரணமாக எமது கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் எமது நாட்டிலுள்ள சில கடற்தொழிலாளர்களும் இழுவைமடித் தொழில் போன்ற சட்டவிரோதத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிலைமையில் இந்திய மினவர்களின் அத்துமீறிய சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நாங்கள் நடத்தியிருக்கின்றோம். அதேநேரத்தில் பல சுற்றுப் பேச்சுக்களிலும் ஈடுபட்டிருக்கின்றோம். ஆனாலும் இவற்றுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகிறது -என்றார். (ம-20)



## கஞ்சா கடத்தல் மன்னாரில் முறியடிப்பு

மன்னார், நவ. 13

மன்னார் குஞ்சுக்குளம் சோதனைச் சாவடியில் வைத்து வாகனம் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மடு பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மன்னார் மதவாச்சி பிரதான வீதி, குஞ்சுக்குளம் சோதனைச் சாவடியில் வைத்து காரொன்று சோதனையிடப்பட்ட போதே 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய மேற்படி கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மடு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. கைதான சந்தேகநபர்கள் 36 மற்றும் 42 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-56)

## வவுனியா சதொசவில் சீனிக்குத் தட்டுப்பாடு

வவுனியா, நவ.13

வவுனியா உள்ள சதொச விற்பனை நிலையத்தில், சீனி கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனி நிர்ணய விலை தொடர்பாக நேற்று முன்தினம் வெளியான வர்த்ததமானி அறிவித்தலை அடுத்து சீனியைப் பெற்றுக்கொள்வதற்காக வவுனியா சதொசவில் மக்கள் முண்டியடித்தனர். எனினும் கொரோனா அபாயம் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இந்த நிலையிலேயே சீனியைப் பெறமுடியாது பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதேவேளை தனியார் வர்த்தக நிலையங்களில் பழைய விலைக்கே சீனி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டினர். (ப)



## தெல்தெனியவில் 13 தொற்றாளர்கள்

கொழும்பு, நவ.13

தெல்தெனிய சுற்று வட்டாரத்தில் 13 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்றுமுன்தினம் இனங்காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இவர்களில் 12 பேர் தள வைத்தியசாலையிலும், ஒருவர் பொல்கொல்ல கல்வியியல் கல்லூரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் தெல்தெனிய தள வைத்தியசாலையில் தற்போது 96 கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை தெல்தெனியவில் ஏழு பொலிஸ் பிரிவுகளில் 454 பேர் சுய தனிமைப்படுத்தப்படுள்ளனர். தெல்தெனிய, ரங்கல. உடதும்பர, ஹசலக முதலிய பொலிஸ் பிரிவுகளில் 290 பேர் அவர்களுடைய வீடுகளில் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

கொரோனா பெருந்தொற்று

## உணவுற்பத்தியில் தற்சார்பு நிலை

*திருகோணமலை மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

'கொவிட்-19 நிலையைக் கருத்திற்கொண்டு உணவு உற்பத்தியை நாம் கட்டாயம் அதிகரிக்க வேண்டும்' என திருகோணமலை மாவட்டச் செயலர் சமன தர்சன பாண்டி கோராள தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செய லர் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் நெல் உற்பத்தி பிரதானமானதாக காணப்படுகின்றது. இருப்பினும் ஏனைய மாவட்டங்களின் நெல் உற்பத்தி உட்பட உணவுற்பத்தி மட்டங்களோடு எமது மாவட்ட உற்பத்தியை நோக்கு மிடத்து திருப்திகரமான நிலையில் இல்லை. இது தொடர்பில் உரிய திணைக்களங்கள் இலக்குகளை நிர்ணயித்து விவசாயிகளை அறிவுறுத்தி செயற்படுத்த வேண்டும். தற்போது நாட்டில் நிலவும் கொவிட் -19 நிலையைக் கருத்திற்கொண்டு எமது உணவுற்பத்தியை நாம் கட்டாயம் அதிகரிக்க வேண்டும். மாவட்ட நுகர்வுக்கு மேலதிகமான உணவுற்பத்திகளை பிற மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்தப்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

மேலும் வாரி சௌபாக்யா திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள 22 கமநல அபிவிருத்தி நிலையத்திலும் ஒரு நிலையத்துக்கு 5 குளம்/அணைக்கட்டு என்ற அடிப்படையில் வேலைத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதன் மூலம் குளங்களின் நீர் கொள்ளளவை அதிகரிக்கச்செய்து பயிர்ச்செய்கைக்கு அவசியமான நீரைத் தடையின்றி வழங்குவதே இத்திட்டத்தின் மூல நோக்கம் என்று தெரிவித்தார். (ந-46)

ஜனாஸா அடக்கம்;

## வர்த்தமானி வரும்வரை பொறுமை காக்கவும்

*எம்.பி இம்ரான் மஹ்ரூப் வேண்டுகோள்*

கொழும்பு, நவ.13

ஜனாஸா அடக்கம் செய்வது தொடர்பான வர்தமானி வெளிவரும் வரை அனைவரும் பொறுமை காக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகங்களிடம் கொழும்பில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர், தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கொரோனாவால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என அரசு அறிவித்துள்ளது. எனவே வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரை வீணான தகவல்களை சமூகவலைத்தளங்களில் பதிவிடுவதில் இருந்து தவிர்ப்பது சிறந்தது. சில அமைப்புகளும் தனி நபர்களும் ஜனாஸா அடக்கத்துக்கு அனுமதி கிடைத்து விட்டது என பிழையான தகவல்களைப் பரப்பி மக்களைக் குழப்பி வருகின்றனர். இதை வைத்து பேரினவாத அரசியல் நடாத்தப்படுவது நாம் அறிந்த விடயமாகும். இவ் அரசியல் விளையாட்டிலிருந்து ஜனாஸா அடக்கத்துக்கு அனுமதி பெற ஆளும் கட்சியினர், எதிர்கட்சியினர் மற்றும் சிவில் சமூகம் என பலரும் முயற்சி செய்து வருகின்றனர்.

ஆனால் கடந்த சில நாள்களாக நடக்கும் நிகழ்வுகளை அவதானிக்கும்போது நன்கு திட்டமிடப்பட்ட ஏமாற்று நாடகமொன்று அரங்கேற்றப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது எனத் தெரிவித்தார். (வ-இ)

## குழம்பிய குட்டையில் காணிபிடித்தல்

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் வித்தையில் கோத்தாபய அரசை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது. அந்தளவுக்கு குழப்பங்களைத் தங்களுக்கு சாதமாக்குவதில் அவர்கள் விண்ணர்கள். கோத்தாபயவின் அரசியல் நுழைவு கூட, ஈஸ்டர் தாக்குதல் குழப்பத்தில் தான் நிகழ்ந்தது. நல்லாட்சி அரசின் மெத்தனமே ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமெனவும், ஒரு பலமிக்க தலைவனே இலங்கைக்குத் தேவை என்றும் ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் உடனடியாகவே ஒரு கருத்துருவாக்கம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் அப்படி பலமிக்க தலைவர் கோத்தாபயவே என்று மக்களாகவே நினைக்கும் படி, இறுதிப்போரை அவர் எப்படி வெற்றிகொண்டார் என்ற கதைகளும் உலவ விடப்பட்டன. இதனால் சிங்கள மக்களின் மூளைக்குள் "கோத்தாபயதான் இலங்கையின் மீட்பர்" என்ற சிந்தனை வலிந்து, அவர்களையறியாமலே திணிக்கப்பட்டது. அதன் பின்னரே அமெரிக்காவால் வந்திறங்கிய கோத்தா " மக்களைக் காக்க நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்" என்று அறிவித்தார்.

இப்படி ஒரு குழப்பத்தை தன்னுடைய அரசியல் நுழைவுக்காகப் பயன்படுத்தி, பின்னரும் ஈஸ்டர் தாக்குதலையே பிரசாரமாக்கி, ஜனாதிபதியானவர் தான் கோத்தாபய. பின்னரும் கொரோனா என்ற குழப்பத்தைப் பயன்படுத்தி, எதிரணியினரின் தேர்தல் பிரசாரங்களுக்கு வாய்க்கட்டுப் போட்டு, அரச ஊடகங்கள் மூலம் தங்களுடைய பிரசாரங்களைத் தங்குதடையின்றி முன்னெடுத்து, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அண்மித்ததாக ஆசனங்களை அள்ள முடிந்தது. ஈஸ்டர் தாக்குதல், கொரோனா முதலாம் அலை என்பவற்றில் தொடங்கிய குழப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தும் உத்தி, இப்போதும் தொடர்கின்றது. கொரோனாக் குழப்பத்தைப் பயன்படுத்தியே 20 ஆம் திருத்தத்துக்கு எதிராக நடக்க இருந்த மக்கள் போராட்டங்களை நடத்த விட முடியாத சூழலை அரசால் உருவாக்க முடிந்தது. பின்னர் வெற்றிகரமாக தாம் நினைத்தபடி 20 ஆம் திருத்தத்தையும், ராஜபக்சக்கள் நிறைவேற்றி விட்டனர்.

கொரோனாக் கொத்தணிகள் புதிது புதிதாக உருவாகிவரும் நிலையில், எங்கெங்கு காணினும் கொரோனா என்னும் சூழலில் , எப்போது எங்களுக்கும் கொரோனா வரப்போகின்றதா என மக்கள் குழம்பியிருக்கும் நிலையில், அதைப் பயன்படுத்தி அந்தச் சந்தில் இன்னொரு சிந்துபாட அரசு முயல்கின்றது. அதுதான் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள். அதாவது குழம்பிய குட்டையில் இம்முறை காணிபிடிக்க நினைக்கிறது அரசு. ஒரு லட்சம் காணித்துண்டங்களை இளையோருக்கு வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளதன் பின்னணி அதுதான். இப்படி ஒரு விண்ணப்பத்தின் மூலம் சிங்களக் குடியேற்றேங்களை சட்டபூர்வமானவையாக மாற்ற அரசு நினைக்கிறது. இந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் சிங்களவர்களை மட்டும் தெரிவுசெய்து, அவர்களை தாங்கள் நினைக்கும் இடங்களில் குடியேற்ற அரசு திட்டமிடுகின்றது. ஒரு கண்துடைப்புக்காகவே இப்படி தமிழ் இளையோரிடமும் விண்ணப்பங்களைப் பெற்றுவிட்டு, முற்றுமுழுதாகச் சிங்களவர்களுக்கே, அந்த ஒரு லட்சம் காணித்துண்டங்களும் சுவீகரிக்கப்படப் போகின்றன.

இருப்பினும் அதற்காக , " என்னதான் நாங்கள் விண்ணப்பித்தாலும் அரசு தரவேண்டுமே காணிகளை? சிங்கள வர்களுக்கு காணிகளைத் தாரை வார்ப்பதுதான் அரசின் கபட நாடகத்தின் உள்நோக்கமெனில், நாம் ஏன் விண்ணப்பிக்க வேண்டும்" என்று தமிழ் இளையோர் அலட்சியமாக இருக்கக்கூடாது. எம்மால் முயன்றளவு விண்ணப்பங்களை விரைந்து அனுப்ப வேண்டும். ஏனெனில் அரசு தான் திட்டமிட்டது போல, சிங்களக் குடியேற்ற வாசிகளுக்குதான் அந்தக் காணித்துண்டங்களை வழங்கப் போகின்றது என்றால், குறைந்தபட்சம் அதனைச் சட்ட ரீதியாகத் தடுக்கவேனும் ஓர் ஆதாரம் அவசியம். 'நாங்கள் விண்ணப்பித்தபோதும் எங்களுக்கு காணிகள் தராமல் சிங்கள மக்களுக்கே காணிகள் வழங்கப்பட்டன" என்று நீதிமன்றில் வழக்குப் போடுவதென்றாலும் அதற்குப் பெருந்தொகையானோர் விண்ணப்பித்திருந்தால் , இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசும், நீதித்துறையும் வழக்கத்தை விடக் கூடுதலான கரிசனை எடுக்கும். அப்படி இல்லாமல் அரசு மனம் திருந்தி நம்மூர் இளையோருக்கு அந்தக் காணித்துண்டங்களைக் கொடுக்கவும் செய்யலாம். எனவே இந்தக் காணித்துாண்டங்களைக் கோரி நாம் ஒவ்வொருவரும் விண்ணப்பிப்பது எம்முடைய கடமை. அந்தக் கடமையிலிருந்து தவறாமல் செயற்படுவோம்.

# நாட்டில் 29 ஆயிரம் குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன!

### முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் ட்ரோன்களால் கண்காணிப்பு

**கொழும்பு, நவ. 13**



**நாட்டில் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 80 ஆயிரம் பேர் தற்போது சுயதனிமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் கண்காணிப்பார்கள். அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் இன்று(நேற்று) மாலை முதல் விசேட தொழில்நுட்பத் திறன்மிக்க 'ட்ரோன்' கமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இதற்கு விமானப்படையின் ஒத்துழைப்பும் பெறப்படும். தனிமைப்படுத்தல் நடைமுறைகளை மீறுபவர்கள் தொடர்பான தகவல்களை ட்ரோன் உடன் வழங்கும். நோய்த் தாக்கம் அதிகரித்தால் அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பை ஏற்படுத்தலாம்.

எனவே, வீட்டுக்கு முன்னால் தனிமைப்படுத்தலுக்குரிய அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தால் எவரும் வெளியில் செல்லக்கூடாது என்பதுடன் வெளியில் இருந்து எவரும் அங்கு வரக்கூடாது. அந்த நடைமுறையை மீறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, மேல் மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களிடம், வீடுகளில் இருந்தே சுகாதார பாதுகாப்புடன் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய இடங்களுக்கு பயணத்தடை இல்லை. ஆனாலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்'- என்றார். (ம-44)

## கோழி இறைச்சி விற்பனைக்குத் தடை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து வீடுகளில் கோழி இறைச்சி விற்பது தடை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. யாழ் மாநகர சபையின் நேற்றைய அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது குறித்த விடயம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டதோடு இறுதியில் முதல்வரால் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சாரதிகள் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் பலர் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான விசாரணைகள் தொடர்பில் உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மாநகர ஆணையாளரால் பதிலும் வழங்கப்பட்டது. (ம-20)

## 14 லட்சம் குடும்பங்களுக்கு இதுவரை 5000 கொடுப்பனவு

கொழும்பு, நவ.13

நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 9 ஆயிரத்து 578 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இதுவரையில் கொடுப்பனவுகள் வழங்கப்படாத குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடு க்கப்பட்டுள்ளது எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (வ-இ)

# அரசுடன் சங்கமிக்குமாறு பொன்சேகாவுக்கு அழைப்பு

கொழும்பு, நவ. 13

ஆளுங்கட்சியுடன் இணையுமாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நேற்று அழைப்பு விடுத்தார் இராஜங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே. நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 'சரத் பொன்சேகா முக்கியமான நபர், அவரை நாம் மதிக்கின்றோம். இராணுவத் தளபதியாக இருந்தபோது கம்பீரமாக இருந்தார். இன்று அந்தப் பக்கம் சென்று பலவீனமடைந்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது அவர் பாதுகாப்பு அமைச்சை எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு வனஜீவராசிகள் அமைச்சு பதவியே வழங்கப்பட்டது. நிதி கூட உரியவகையில் ஒதுக்கப்படவில்லை. எனவே, எங்கள் பக்கம் வாருங்கள், உங்களை மதிக்கின்றோம்' - என்றார். (ம- 44)

**வடமாகாண மரநடுகை மாதம்**
கார்த்திகை 2020
"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.- **தியோடர் ரூஸ்வெல்ற்**

## பலியெடுக்கும் கொரோனா:

# வெளிநாடுகளில் இதுவரை 98 இலங்கையர் உயிரிழப்பு



**கொழும்பு, நவ.13**

**கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சுமார் 98 இலங்கையர்கள் இதுவரையில் உயிரிழந்துள்ளளன என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு, இதில் அதிகளவான மரணங்கள் சவூதி அரேபியாவில் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரையில் சவூதி அரேபியாவில் மாத்திரம் 34 மரணங்கள் பதிவாகியுள்ளன என அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் 10 பேரும், கட்டாரில் 6 பேரும், ஓமானில் 4 பேரும், பஹறைன் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் தலா இருவரும் இஸ்ரேலில் ஒருவரும், பிரித்தானியாவில் ஐவரும், அமெரிக்கா மற்றும் கனடாவில் தலா நான்கு பேரும் ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் தலா இருவரும், ஈரானில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ப-இ)

## பிள்ளையான் கட்சியின் செயலர் கைது



கொழும்பு, நவ.13

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான பூ.பிரசாந்தன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை அவர் மட்டக்களப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2008ஆம் ஆண்டு ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக பூ.பிரசாந்தன் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான சாட்சிகளை அவர் அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ப-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
10.11.1935



இறப்பு
11.11.2020

### திரு. பெருமாள் முத்தையா

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் மாந்த் லா யூலியை வசிப்பிடமாகவும் கொண்ட பெருமாள் முத்தையா கடந்த (11.11.2020) புதன்கிழமை 85 ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு பெருமாள், நன்னி சின்னாச்சி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லையா, தம்பிப்பிள்ளை றுக்குமணி அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னையா முருகையா, கந்தையா நல்லையா ஆகியோரின் சகோதரனும் பொன்னம்மாவின் அன்பு அண்ணனும் பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற இராசநாயகி திருச்செல்வம், திருஞானம், யோகேஷ்வரி, காலஞ்சென்ற செல்வராசா புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் இராஜேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்பு கணவரும் கணேசபாலன் (இலங்கை) வளர்மதி (இலங்கை) ஜெயமதி (பிரான்ஸ்) பிறேமபாலன் (பிரான்ஸ்) குணவதி (இலங்கை) சயந்தமதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளினி (இலங்கை) றன்சித்றாஜ் (இலங்கை) பாஸ்கரன் (பிரான்ஸ்) விஜிதா (பிரான்ஸ்) வதனரூபன் (இலங்கை) கவின்பிரகாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் டறீனா (சுவிஸ்), சபீசன் (இலங்கை), நிரூஜன், நிலக்சலா, நிசாகரன் (இலங்கை) ஜென்சி, ஜெர்சிகா, ஜெர்சன், ஜெரின் (பிரான்ஸ்), ஆதிசன், ஆருஜன், அயின், அஷ்வினா, அல்வின் (பிரான்ஸ்) சங்கவி, சங்கீதா, சங்கீதன், சங்கீர்த்தனன் (இலங்கை) கிஷான், கியாஷ், கிர்த்திக், கியான் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் சஷ்வின், சஷ்மினா (சுவிஸ்) ரித்திகா, விஷால் (இலங்கை) இனியா, இஷான், (பிரான்ஸ்) வசீனா, விகான் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**மகள் -சயந்தமதி(சயந்தா) பிரான்ஸ் (0033782462224),**

**மருமகன்- கவின்பிரகாஷ் (கெவின்) பிரான்ஸ் (0033652890980)**


## 9,520 குடும்பங்கள் கொழும்பில் தனிமை

கொழும்பு, நவ.13

கொழும்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வரை 9ஆயிரத்து 520 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரட்ன தெரிவித்துள்ளார். அவர்களில் 9 ஆயிரத்து 316 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

"கொழும்பில் நான்கரை லட்சத்துக்கு மேலானவர்கள் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவுக்குத் தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களில் ஒரு லட்சத்து 24 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக திறைசேரி 2 ஆயிரத்து 407 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது" என்றும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

## கொரோனாத் தொற்றாளர்கள் இனி வீடுகளிலேயே தனிமை



கொழும்பு, நவ. 13

கொரோனா வைரஸ் நோயாளிகளை அவரவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி வருகின்றோம். எனினும், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் முதியவர்கள் அல்லது வேறு நோயாளிகள் இருக்கும்பட்சத்தில் மாத்திரம் அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புகின்றோம் என்று தொற்றுநோயியல் நிபுணர் சுடத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை 14 நாள்களுக்குப் பின்னர் மீண்டும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்துகின்றோம். நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாத கொரோனா நோயாளிகளை மருத்துவமனைக்கு அனுப்புவதற்குப் பதிலாக கிசிச்சை நிலையங்களுக்கு அனுப்புகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-இ)



## தொற்றிலிருந்து பாதுகாக்கும் பணி வெற்றிகரமாக நகர்கிறது

### *தீபாவளி வாழ்த்தில் பிரதமர் பெருமிதம்*

கொழும்பு, நவ.13

உலகையே அச்சுறுத்திவரும் கொவிட் 19 நோய்த் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியை அரசாங்கம் மக்கள் அனைவரதும் ஒத்து ழைப்புடன் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

எல்லா மதங்களிலும் விளக்கு ஏற்றுவதன் காரணம் இருளையும் அறியாமையையும் அகற்றி ஒளியைப் பரப்புவதற்கே. தீபாவளியும் அதன் எதிர்பார்ப்புகள் நிறைந்த தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்துவைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத் தீபாவளித் திருநாளைக் கொண்டா டுவோம்.

இந்த ஒளியை நாம் அணையவிடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இன்று நம் தேசம் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்கத்தின் தேசியக் கொள்கைக்கு அமைவாக ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது. அனைத்துத் துறைகளிலும் நாம் முன்னேற்றம் காண முயல்கின்றோம்.

கொவிட்-19 நோய்த்தொற்றிருந்து இலங்கைத் திருநாடு விரை வில் மீள்வதற்கு எம் மக்களுக்கு எல்லா சுபீட்சங்களையும் தரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இந்த தீபாவளித் திருநாள் அமையட்டும் என்றுள்ளது. (ப)

# இந்திய மீனவர் சுரண்டலால் பட்டினிச் சாவு அபாயம்!

*முல்லை. மீனவர்கள் விரக்தி*

**முல்லைத்தீவு, நவ.13**
**முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளதால் கடல்வளங்கள் அழிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**

இந்நிலை தொடருமானால் முல்லை மீனவர்களுக்கு பட்டினிச் சாவு அபாயம் ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொரோனா அச்சநிலையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்திய இழுவைப்படகுகள் எமது கடற் பரப்பினுள் தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபடுமானால், கடற்றொழிலை நம்பி வாழும் எமது மீனவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க நேரிடும்.
இவர்களின் வருகையை அரசு கட்டுப்படுத்தாவிடில், மீனவர்கள் கடன் சுமைகளிலிருந்து மீள முடியாத நிலை ஏற்படும்.
எனவே உரிய அதிகாரிகளும், அரசும் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு, இவர்களின் அத்துமீறிய வருகையைத் தடைசெய்ய வேண்டும்- என்றார். (ற-246)

## காற்றில் பறந்தது டக்ளஸ் வாக்குறுதி

*முல்லை.கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் விசனம்*

முல்லைத்தீவு, நவ.13
கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்குத் தீர்வு பெற்றுத்தருவதாக கடந்த 2013 ஆம் ஆண்டு வாக்குறுதி அளித்துள்ள நிலையில், அந்த வாக்குறுதியை இன்றுவரை நிறைவேற்றவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.
கடற்றொழிலாளர் சமாசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்திய இழுவைப் படகுகள் பிரச்சினை என்பது இன்று நேற்றல்ல, கடந்த பத்து வருடங்களாக தொடர்ச்சியான ஒரு பிரச்சினையாக உள்ளது.
இது தொடர்பில் கடந்த 2013 ஆம் ஆண்டு நாம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது, அங்கு வருகை தந்த அப்போதைய புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் இன்றுவரையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவே இல்லை என்றார். (ற-246)

## மரக்கன்று வழங்கல்



யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள. அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியில் மரக்கன்று வழங்கும் நிகழ்வு தலைவர் செ. செல்வராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளைப் பெற்றுக்கொண்டனர். (வ-63)



## ஊரடங்கை மீறிப் பயணித்த 32 பேர் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, நவ.13
ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் அமுலில் உள்ள ஊடரங்குச் சட்டத்தை மீறி ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து இடைமறிக்கப்பட்டு அதில் பயணித்தோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.
ஓட்டமாவடியில் இருந்து வெளிப் பிரதேசத்தில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு 32 தொழிலாளர்கள் பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர் என சுகாதாரத் தரப்பினருக்கு தகவல் கிடைத்துள்ளது.
இதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.நௌபர் தலைமையில் நடைபெற்ற சோதனையில் பேருந்து தடுக்கப்பட்டு அதில் பயணம் செய்த அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-150)



## பனிக்கன்குளத்தில் வாகன விபத்து

முல்லைத்தீவு, நவ.13
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு, வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. வவுனியா நோக்கி பெக்கோ இயந்திரத்தை ஏற்றி வந்த வாகனம் ஒன்று அதன் சில்லுக் காற்றுப் போனதன் காரணத்தால் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
இந்நிலையில் வவுனியாவை நோக்கிச் சென்ற இன்னுமொரு கென்டேனர் பாரவூர்தி வாகனம் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.
இச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-246)



## ஹொட்டல்களுக்கு பாதுகாப்புச் சான்றிதழ்

கொழும்பு, நவ.13
இலங்கையில் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட ஹொட்டல்களுக்கு அடுத்த வாரம் முதல் பாதுகாப்புக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் தமது தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆர்வமாகவுள்ள மற்றும் தமது அதிகார சபையில் பதிவுசெய்துள்ள ஹொட்டல்களுக்கே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
கொரோனாவுக்குப் பின்னர் விடுமுறை யைக் கழிப்பதற்கு இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் இந்தச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (ற-ரி4)



## தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உலர் உணவுகள்

மன்னார், நவ.13
கொரோனாத் தொற்று சந்தேகத்தில் நானாட்டான் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 12 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் தனியார் தொண்டு நிறுவனம் ஒன்றால் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ் கந்தகுமாரிடம் கையளிக்கப்பட்டது. அவை நானாட்டான் பிரதேசத்தில் மடுக்கரை வங்காலை போன்ற பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-213)

அரச, தனியார் நிறுவனங்கள்

# பணியாளர்களின் பெயர் விவரங்களை சுகாதாரப் பணிமனையிடம் சமர்ப்பிக்கவும்

## சுகாதார திணைக்களம் கண்டிப்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 13

அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது பணியாளர்களின் விவரங்களை உடனடியாக நிறுவனம் அமைந்துள்ள எல்லைப் பரப்புக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது நாட்டில் கொரோனா தொற்று நோய் பரவும் அபாயம் நிலவி வருவதால் இந்நோய் தொடர்பான கண்காணிப்பை இலகுபடுத்தும் பொருட்டு ஆளுநர் அனைத்து அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தமது நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களதும் பெயர், வதிவிட முகவரி மற்றும் கைத்தொலைபேசி இலக்கம் என்பவற்றை நிறுவனம் அமைந்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.



மேலும் ஒவ்வொரு நிறுவனமும் தமது ஊழியர்களில் மூத்த நிலையிலுள்ள ஒருவரை நிறுவனத்துக்கான இணைப்பாளராக நியமனம்செய்து அவரது விவரங்களையும் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு வழங்க வேண்டும்.

இந்தத் தொடர்பாடல் தகவல்களை அனைத்து நிறுவனங்களும் தமது சுகாதார மருத்துவ அதிகாரிக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்பு ஆளுநர் பணிப்புரைக்கமைய சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ.இ)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு ஐந்து வருட கடூழியச் சிறை

திருகோணமலை, நவ.13

திருகோணமலையில் ஒன்பது வயதுச் சிறுமியை பாலியல் துஷ் பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனையை நேற்று முன்தினம் விதித்துள்ளது.

2012ஆம் ஆண்டு சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தப் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதேவேளை இது தொடர்பில் திருகோணமலை மேல் நீதி மன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களிலும் அந்த நபர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதையடுத்து நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியனால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்குமாறும் அவர் கட்டளையிட்டார். (ந-இ)

# தடையை மீறினால் கட்டாய சுயதனிமை!

## பிரதி பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

கொழும்பு, நவ.13

மேல் மாகாணத்தை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்ட போதிலும், சட்டவிரோதமாக வெளியேறி ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லும் நபர்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



இவ்வாறு தடையை மீறி ஒருவர் மேல் மாகாணத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்குள் பிரவேசித்தால், அவரை 15 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தலுக்கு அனுப்புமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந-இ)

# தீபாவளி பண்டிகையை எளிமையாகக் கொண்டாடுக

## பெருந்தோட்ட மக்களிடம் வேண்டுகோள்

நுவரெலியா, நவ.13

தீபாவளி பண்டிகையை மிக எளிமையாகக் கொண்டாடுமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் பெருந்தோட்ட மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



மேலும், தோட்டத் தொழிலாளர்கள் நெருக்கமாக வாழும் லயன் குடியிருப்புகளில் எவருக்கேனும் வைரஸ் தொற்றினால், அது வேகமாகப் பரவும் சாத்தியம் உள்ளது. எனவே, சமயக் கிரியைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்து முடிந்தவரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும். கோயில் பூஜைகளில் கூடுதலான அடியார்கள் கலந்துகொள்ள ஆலய நிர்வாகிகள் இடமளிக்கவேண்டாம். கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வேலை செய்யும் இளைஞர் யுவதிகள் தீபாவளிக்காக ஊர் திரும்புவதை முடிந்தவரை தவிருங்கள். அத்துடன் மதுபானசாலைகளை மூடுமாறு கலால் திணைக்கள ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந -ரி4)



# இன்றைய நாள்

**மேடம்:** நண்பர் மகிழ்ச்சிகரமான தகவல் தருவார். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். சமூகத்தில், நல்ல மதிப்பு வளரும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் உருவாகலாம். அனுபவத்தால் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற சீர்திருத்தம் தேவை. சிக்கனம் அவசியம்.

**மிதுனம்:** பேச்சில் சாதுர்யம் நிறைந்திருக்கும். நண்பர், உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** உறவினரின் உதவியால் பெருமை கொள்வீர்கள். மனதில் உற்சாகமும், செயல்களில் சுறுசுறுப்பும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வளர்ச்சி பெறும். பணவரவு அதிகரிக்கும். எதிரிகள் விலகுவர்.

**சிம்மம்:** சிலர் கூறும் அறிவுரை சங்கடத்தை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள பணி தாமதமாகலாம். வரவை விட செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**கன்னி:** முக்கிய செயல் நிறைவேற தாமதமாகலாம். தகுந்த திட்டமிடுதல் வெற்றி பெற உதவும். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம் சச்சரவு பேசக்கூடாது. பணத்தேவை அதிகரிக்கும்.

**துலாம்:** செயலில் வசீகர மாற்றம் உருவாகும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். கூடுதல் பண வருமானம் உண்டு.

**விருச்சிகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** தொடர்பில்லாத பணி குறுக்கீடு தரும். குடும்பத்தினரால்சிரமம்சரியாகும். தொழிலில் கூடுதல் உழைப்புத் தேவை. சீரான பணவரவு கிடைக்கும். வாகன பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மகரம்:** செயல்களில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் பணிகளை நிதானமுடன் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். திட்டமிட்ட காரியம் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மீனம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. நிலுவைப் பணியை நிறைவேற்றுவதால் பதற்றம் குறையும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும்.

# வடக்கு கல்வித்துறை மோசடிகளுக்கு கல்வி அதிகாரிகளே முழுப் பொறுப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ.13**

**முறைகேடுகளுக்குத் துணைபோகும் கல்வி அதிகாரிகளின் போக்காலேயே வடக்கில் மோசடிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு வட மாகாண கல்வி அதிகாரிகளே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

இது தொடர்பபில் இலங்கை ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பிரபலமான பாடசாலைகள் சிலவற்றின் நிதி மோசடிகள் தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதாரங்களை கல்வியமைச்சுக்கு வழங்கியிருந்தது. இன்று வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கண்துடைப்பாக விசாரணைக்குழுவை அமைப்பதும் பின்னர் அதனை இழுத்தடிப்பதுமே வழக்கமாகவுள்ளது.

ஒருவர் பணமோசடி செய்தால் மீளளிப்பு செய்வதன் மூலம் தப்பித்துக்கொள்ள முடியும் என்ற நிலைமையே வட மாகாணத்தில் உள்ளது. அவர்களுக்கு உரிய வேளைகளில் பொருத்தமான இறுக்கமான தண்டனைகள் வழங்கப்பட்டிருக்குமாயின் அவை முன்னுதாரணமாக இருந்து இன்று பல மோசடிகளைத் தவிர்த்திருக்கும். முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல், தகுதியற்றவர்கள் மூலம் கல்வி சீரழிவதற்கு அதிகாரிகளே துணைநிற்பது மிகுந்த கவலைக்குரிய விடயமாகும் -என்றுள்ளது. (ப)

# கல்மடு பாடசாலையில் தொடர்கின்றது திருட்டு

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சி கல்மடு பாடசாலையில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் தொடர்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பாடசாலையில், அண்மையில் புல்லு வெட்டும் இயந்திரம் திருடப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம், நிழல் பிரதி இயந்திரம் ஒன்றும் திருட்டப்பட்டுள்ளது. பாடசாலைக்கென காவலாளி ஒருவரை நியமிக்காததன் காரணமாகவே இவ்வாறு பொருள்கள் திருடப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து, தமது பாடசாலைக்கு காவலாளியை நியமிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ப-113)

# மாரி மழையை எதிர்கொள்ள முன்னாயத்தக் கலந்தாய்வு

## முல்லையில் கூடினர் அதிகாரிகள்

முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடலொன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த 2018ஆம் ஆண்டு இந்த பருவப்பெயர்ச்சி மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த நிலையில், இவ்வாறான அனர்த்தம் தொடர்பிலான முன்னாயத்தக் கலந்துரையாடலாக அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் எனப் கலந்துகொண்டுள்ளனர். (ப)

# இராணுவ மருத்துவமனைக்காக உயிரியல் பாதுகாப்பு பெட்டகம்

கொழும்பு, நவ. 13

நாரா ஹென்பிட்டவில் அமைந்துள்ள இராணுவ மருத்துவமனைக்கு சுமார் 2 மில்லியன் ரூபா பெறுமதியான உயிரியல் பாதுகாப்பு பெட்டகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த உயிரியல் பாதுகாப்பு பெட்டகம் ஆய்வுகூட சூழல் மற்றும் நுண்ணுயிர்கள் மற்றும் ஏனைய பிற தாக்கங்களில் இருந்து பாதுகாக்கும் தன்மை மிக்கது. குறித்த மருத்துவமனையில் நாளொன்றுக்கு சுமார் 500 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் இந்தப் பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)



# உடைப்பெடுத்துள்ளது வெளிக்கோணமடு குளம்

முல்லைத்தீவு, 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட வெளிக்கோணமடு குளம் உடைப்பெடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக வெளிக்கோணமடு குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் குளம் உடைப்பெடுத்துள்ளது.

இதனை அவதானித்த விவசாயிகள் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து உடனடியாக குளக்கட்டைச் சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-19)

# கண்ணாடிப்பிட்டி மயானத்தில் மற்றுமொரு எரிகொட்டகை


சாவகச்சேரி, நவ. 13

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மேலும் ஒரு எரிகொட்டகை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது. இதிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சபைக்கு உட்பட்ட வேலைத் திட்டங்கள் கேள்வி கோரல் மூலம் கொடுக்கப்பட்டபோது 9 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது. அதற்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் எரிகொட்டகை அமைக்க எட்டு லட்சம் ரூபாவையும் சாவகச்சேரி நகரப் பகுதியில் தனங்களப்பு வீதியில் சேதமடைந்து காணப்படும் வடிகாலைச் சீரமைக்க ஒரு லட்சம் ரூபாவை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமென சபையின் செயலாளர் அமர்வில் தெரிவித்தபோது உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் ஏற்கனவே எரிகொட்டகை உள்ளபோதிலும் சில வேளையில் மூன்றுக்கு மேற்பட்ட சடலங்கள் ஒரே நாளில் தகனத்திற்குக் கொண்டு வரும் வேளையில் எரிகொட்டகைக்கு வெளியே வைத்து எரிக்க வேண்டியுள்ளது. இதனால் அவசிய தேவை கருதி இவ்வேலையை மேற்கொள்ள முன்னுரிமைப்படுத்தப்பட்டது - எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)



டெங்கு அபாயம்;

# 3 குடியிருப்பாளருக்கு சிவப்பு அறிவித்தல்


சாவகச்சேரி, நவ.13

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் நேற்று எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதியில் நடத்தப்பட்ட டெங்குப் பரிசோதனைகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட 3 குடியிருப்பாளர்களுக்கு அவற்றைத் துப்புரவாக வைத்திருக்க மூன்று நாள்கள் கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்கள பூச்சியியல் ஆய்வு உதவியாளர்கள் டெங்குவால் மக்கள் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதியில் கடந்த வாரம் நடத்திய பரிசோதனைகளில், பல குடியிருப்புகள் மற்றும் கோவில்களில் டெங்குக் குடம்பிகளுடன் நீர் ஏந்துப் பொருள்கள் காணப்படுவதாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு அறிக்கையிட்டனர்.

இதனையடுத்து சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பின் பேரில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் நேற்று அப் பகுதியில் பரிசோதனைகளை மேற்கொண்டனர். டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் பகுதிகளாக 30 இடங்கள் இனங்காணப்பட்டன. அவற்றை உடனடியாகத் துப்புரவுசெய்யுமாறு பணித்தனர். அவற்றில் 27 இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன. மூன்று இடங்களில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டதால் இந்த இடங்களின் உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. (ப-9)

## 600 பொலிஸாருக்கு கொவிட்- 19 தொற்று



கொழும்பு. நவ.13
நாட்டில், 600 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊட கப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
சுமார் 3 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்க ளில் இருந்தே இந்த கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். தற்போது இலங்கையில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை 87 ஆயிரம் பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வரு கின்றனர் -என்றார். (ப)

## உரிய அனுமதிகள் பெறாது யாழ்ப்பாணம் வந்த சடலம்

### இறுதிச் சடங்கில் பங்கேற்ற அனைவரும் தனிமையில்

யாழ்ப்பாணம், நவ.13
கொரோனா அபாயமுள்ள வெளி மாகாணமொன்றில் உயிரிழந்த 95 வயதான முதி யவர் ஒருவரின் சடலம், உரிய அனுமதிகள் இன்றி யாழ்ப் பாணம் கொண்டுவரப்பட்ட தால், அவரது இறுதிச் சடங்க ளில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் தனிமைப்படுத் தப்பட்டனர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட் பட்ட பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொரோனாத் தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்ட வெளி மாகாணம் ஒன்றில் தனது வீட்டிலேயே குறித்த முதி யவர் உயிரிழந்துள்ளார். எனி னும் அவரது இறப்புக்கு என்ன காரணம் என்பதை சுகாதாரத் துறையினரிடமிருந்து அறி யாது, உரிய சுகாதார விதிமு றைகளைப் பேணாது, திடீர் மரண விசாரணை அதிகாரி யின் அறிக்கையை மட்டும் பெற்று நேற்றுமுன்தினம் இரவு சடலம் எழுவை தீவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பான தகவலை அறிந்த ஊர்காவற்றுறை சுகா தார மருத்துவ அதிகாரி மணி மனையினர், முதியவரின் இறுதிச் சடங்களில் கலந்து கொண்ட 14 பேரைத் தனி மைப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# கை கொடுத்து வாழ்த்துவதை தீபாவளியில் தவிருங்கள்

### சுகாதார அமைச்சு வேண்டுகோள்



**கொழும்பு, நவ. 13**
**தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டத் தின்போது, கைகுலுக்கி வாழ்த்துத் தெரி விப்பதைத் தவிர்த்து 'ஆயுபோவன், வணக் கம்' கூறி அல்லது வேறு வழியில் வாழ்த்து வது பொருத்தமானதாகும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

தீபாவளிப் பண்டிகைக் கொண் டாட்டத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார விதிமுறை கள் தொடர்பாக இந்து மதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை அறிவூட்டுவதற் காக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட சுகாதார நடை முறையிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;
மக்கள் ஒன்றுகூடாமல் தற்போ துள்ள இடங்களிலேயே தீபாளி யைக் கொண்டாடுங்கள். தூரப் பயணங்களைத் தவிர்த்து வீடு களிலேயே தீபாவளியைக் கொண்டாட வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்கு, நண்பர் களுக்கு மற்றும் உறவினர் களுக்குத் தொலைபேசியில் வாழ்த்துக்களைத் தெரிவிக்க வும். கோயில்களில், சமூகத்தில் அல்லது தோட்டப்புறங்களில் மதக் கொண்டாட்டங்கள் மேற் கொள்வதைத் தவிர்க்க வேண் டும். உடனே தீப்பற்றக்கூடிய சிறிதளவு அற்ககோல் அடங் கிய கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்திவிட்டு ஒளி விளக் குகளை ஒளிரச்செய்வதைத் தவிர்க்கவும். மதச் செயற்பாடு களுக்கு முன்னரும் பின்னரும் சவர்க்காரமிட்டு கைகளைக் கழு வவும். மதுபானம் மற்றும் புகை யிலை பாவிப்பதைத் தவிர்க்க வும் -என்றுள்ளது. (ப)

## ஐயப்ப பக்தருக்கான சுகாதார நடைமுறை

யாழ்ப்பாணம், நவ.13
தற்போதுள்ள கொரோ னாத் தொற்று நிலைமை காரண மாக ஐயப்ப பக்தர்கள் சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி, மாலை அணிந்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ சடகோப ராமானுஜ ஐயப்ப பக்த சபை திருவாபரணக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;
எதிர்வரும் 16ஆம் திகதி ஐயப்ப பக்தர் கள் மாலை அணிய உள்ள நிலையில், தனிநபர்களாக ஆல யம் சென்று மாலை அணிந்துகொள்ள வேண்டும். மாலை அணியும் நிகழ்வுக்கு அந்தந்தப் பகுதி சுகா தார மருத்துவ அதி காரியிடம் அனுமதி பெற்றுக்கொள்வது டன், மாலை அணி பவரும், மாலை அணிவிக்கும் குருநா தரும் முகக் கவசம், கையுறை என்பற்றை அணிந்து கொண்டி ருத்தல் வேண்டும்.

வழமைபோன்று அல் லாது இம்முறை தேங் காய் ஒன்றையும், ஒரு வெற்றிலையில் சபரி மலை மாலையையும் கொண்டு செல்வது சிறந்தது.

வரும் பக்தர்களின் விவரங்களைப் பதிவு செய்வதுடன், மாலை போடும் குருசாமி அடிக்கடி தொற்றுநீக் கியால் கைகளைக் கழுவிக்கொள்வது சிறந்தது. நெருப்புப் பற்றக்கூடிய தொற்று நீக்கிகள் உபயோகிக் கும்போது கவனத்து டன் நடக்க வேண்டும். மாலை அணிந்து வீட்டுக்குச் செல்லும் போது உடலைச் சுத் தப்படுத்திக்கொள்ள வேண்டும் -என்றுள் ளது. (ப)

இளம் தொழில் முனைவோருக்கு காணி வழங்கும் திட்டம்:

# விண்ணப்பதாரிகளுக்கு உதவ ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு!


கிளிநொச்சி, நவ.13
இளம் தொழில் முனைவோ ருக்கு 1 லட்சம் காணித்துண்டு களை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு விண்ணப்பிப் போருக்கு துறைசார் நிபுணத் துவ அமைப்புக்கள் ஊடாகத் தொடர்ச்சியாக பல்வேறு உதவி களையும், ஒத்துழைப்பையும் பெற்றுக்கொடுப்பதற்கு கிளி நொச்சி மாவட்ட ஒருங்கிணைப் புக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற் காக விண்ணப்பிக்கும் இளை ஞர் யுவதியருக்குத் தேவைப் படும் வழிகாட்டல் உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான தொழில்முயற் சிகளை இனங்காணல், அதற் கான திட்ட முன்மொழிவைத் தயாரித்தல், திட்டத்தை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்துதல் முதற்கொண்டு, உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத் துவது வரையில் தொடர்ச்சியாக இந்த ஒத்துழைப்பு வழங்கப்பட வுள்ளது என ஒருங்கிணைப்புக் குழுவின் மேலதிக இணைப்பா ளர் கோ.றுஷாங்கன் தெரிவித் தார். கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவு கள், மற்றும் மாவட்டச் செயல கம் ஆகியவற்றின் ஊடாக விண் ணப்பங்களைச் சமர்ப்பித்தோர், மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் அறிவித்துள்ளார். (ப)

கொரோனாவிலிருந்து

## பாதுகாப்பு வேண்டி பள்ளியில் வழிபாடு



மட்டக்களப்பு, நவ.13
கொவிட்-19 தொற்றிலிருந்து அனைத்து மக் களையும் பாது காக்கும் நோக்கில் கோறளைப்பற்று, செம்மண்ஓடை தக் குவா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் யாஸீன் சூரா ஓதப்பட்டதுடன், விஷேட துஆ பிராத்த னையும் நேற்று இடம்பெற்றது.

விஷேட துஆ பிரார்த்தனையை ஜும்ஆ பள்ளிவா சலின் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் எம்.எஸ். அஷ்ரப் நடத்தினார். (ப-150)

# அரசுக்கு எதிராக மீண்டுமொரு உச்சபட்ச தீர்மானம் வேண்டும்

## மாவை சேனாதிராஜா வலியுறுத்து



**கொடிகாமம், நவ. 13**

**2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மீண்டுமொரு உச்ச பட்ச தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.**

அமரர் ரவிராஜின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை அரசாங்கமும், படையினரும் போர்க்காலத்திலும் அதன் பின்னரும் மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது குறித்து ஐ நா சபைக்கு மனு அனுப்புவதற்காக இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தோம். அதன் வெளிப்பாடே ரவிராஜின் அநியாயக் கொலைக்கு காரணமாக அமைந்தது. அதன் தொடர்ச்சியாக மனித உரிமைப் பேரவையிடம் 2012 ஆம் ஆண்டு, மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மனித உரிமைப் பேரவை ஏகமனதாகவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தது.

அந்தத் தீர்மானங்களில் இருந்து வெளியேறி இருக்கின்ற இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், இன்னும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படவேண்டும். இலங்கைக்கு எதிரான உச்சபட்ச தீர்மானமாக அது அமைய வேண்டும். அதற்காக தமிழ்த் தேசியத்தை அடித்தளமாகக் கொண்ட அனைத்து அமைப்புகள் மற்றும் கட்சிகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகக் குரல்கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றோம் -என்றார். (ப-159, 131, 9)

---

கொரோனாத் தொற்று;

# ஐவரில் ஒருவருக்கு உளநலப் பாதிப்பு

## ஆய்வில் தகவல்


கொழும்பு, நவ. 13

கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் ஐவருள் ஒருவர், 90 நாள்களுக்குள் உளநலப் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் உளவியல் நிபுணர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம், இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உள ரீதியான பாதிப்பை எதிர்கொள்பவர்கள்,மனஅமுத்தம் மற்றும் நித்திரையின்மை போன்ற நோய்களுக்கு முகம்கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் உள ரீதியான பாதிப்பை எதிர்கொள்வதற்கான காரணம் மற்றும் அதற்கான சிகிச்சை குறித்து, உலகளாவிய ரீதியில் உள்ள மருத்துவர்கள் மற்றும் நிபுணர்கள் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)



---

கொரோனாவால்

# 10 ஆயிரம் பேர் பாதித்தால் அதில் 28 பேர் உயிரிழப்பர்

## தொற்று நோயியல் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் 10 ஆயிரம் பேரில் 28 பேர் உயிரிழக்கும் அபாயம் காணப்படுகின்றது என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தாவது;

நாட்டில் பெரும்பாலான உயிரிழப்புகள் முதுமை மற்றும் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டதன் காரணமாகவே ஏற்படுகின்றன. கொரோனா மூன்றாவது அலை ஆரம்பித்ததில் இருந்து 40 நாள்களுக்குள் சுமார் 30 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற கொரோனா உயிரிழப்புகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன், நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை தொற்றுக்கு உள்ளானவர்களில் அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர் -என்றார். (ப-இ)

---

வவு.வடக்கு சபையில்

# ஒரு வாக்கால் பாதீடு வெற்றி

வவுனியா, நவ.13

வவுனியா வடக்கு பிரதேசசபையின் வரவு செலவுத்திட்டம் ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் தவிசாளர் ரி. தணிகாசலத்தால் சபையில் முன்வைக்கப்பட்டது. அந்தச் சபையில் தமிழ் சிங்கள உறுப்பினர்களை உள்ளடக்கி 25 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 4 சிங்கள உறுப்பினர்கள் நேற்று சபைக்குச் சமூகமளிக்காத நிலையில் வரவு செலவுத்திட்டம் முன் வைக்கப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரொருவர் வரவு செலவுத் திட்டத்தில் குறைகள் இருக்கின்றது. எனவே ஏற்க முடியாது எனத் தெரிவித்தார். இதனை அடுத்து வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என இருவர் இரகசிய வாக்கெடுப்புத் தேவை எனத் தெரிவித்தனர். கூட்டமைப்பு உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்புக்குக் கோரினர். வாக்கெடுப்பை பகிரங்கமாக நடத்துவதா இரகசியமாக நடத்துவதா என்பதற்கும், ஒரு வாக்கெடுப்பு இடம்பெற்றது. 11 பேர் இரகசிய வாக்கெடுப்புக்கும் 8 பேர் பகிரங்க வாக்கெடுப்புக்கும் வாக்களித்த நிலையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்த தலைவரால் தீர்மானிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டம் இரகசிய வாக்குகெடுப்புக்கு விட்டபோது 11 வாக்குகள் ஆதரவாகவும் 10 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ப-ரி3)

---

# பழிபோடுவதை விட்டு பொறுப்பை ஏற்கவும்

## ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ.13

கொரோனா வைரஸ் பரவலுக்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும் என்று ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு பொதுமக்கள் மீதும் ஊடகங்கள் மீதும் அரசு பழிபோட முயல்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான திட்டங்கள் இல்லாததன் காரணமாக, பொதுமக்கள் பெருமளவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தருணத்தில் அரசு பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளது. தற்போதைய நிர்வாகம் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கும் தவறியுள்ளது.

பொதுமக்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்குப் பதிலாக, அரசு இந்த இக்கட்டான தருணத்தில் இலாபம் சம்பாதிக்க முயல்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

---

# புல்மோட்டைப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர்

திருமலை, நவ.13

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

புல்மோட்டை பிரதேசத்தில் நீண்ட காலமாகக் குடிதண்ணீர் வசதிகள் இல்லாது காணப்பட்ட பகுதிகளான ஹைரிய்யா நகர்,தக்வா நகர்,ஜின்னாபுரம் மற்றும் சிங்கள சுனாமிபுரம் போன்ற பகுதிகளுக்கே புதிய நீர் வழங்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் 15க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. (ப-இ)



# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# பொது அறிவித்தல் - 2021

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2021**
இப்பிரதேச நிர்வாக எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் உரிய விண்ணப்ப படிவத்தினை உரிய உபஅலுவலகங்களில் பெற்று 31.03.2021 ற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளவும். 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**02. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் 2021**
1533/16 ஆம் இலக்க 25.01.2008 மற்றும் 1534/18 ஆம் இலக்க 01.02.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்டதற்கமைய தொழில் அல்லது வியாபாரத்தை பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை உரிய உப அலுவலகத்தினூடாக கட்டாயமாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

**03. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள், குழாய்கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்கிறீற் வேலைகளுக்கும் பிரதேசசபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும். மேலும் கட்டடம் அமைக்கப்படும் காணியின் 1/3 பகுதி கட்டாயமாக நிலப்பகுதியாக அமைதல் வேண்டும்.

**04. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல் 2021**
2021 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி(வளர்ப்பு நாய்கள்) உரிமங்களை 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**05. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**
சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளில் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியினை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களின் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**06. மரக்கறி, மீன், இறைச்சிவகை விற்பனை தடை செய்தல்**
பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 01KM தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**07. படவரைஞர் பதிவு செய்தல் / புதுப்பித்தல்**
2021 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே படவரைஞராக பதிவு செய்தவர்களும் 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்.

**08. பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**
சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09. கழிவகற்றல் சேவை**
தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றிகொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி பிரதேசசபையினால் ஒதுக்கப்பட்ட இடத்தில் இடப்பட வேண்டும். உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிகொள்ளல் வேண்டும்.

**10. நீர் வழங்கல் சேவை**
பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படின் பிரதேசசபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

**11. கனரக வாகன சேவைகள்**
பக்கோ, கலிபவுசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகள் பெறுவதற்கு, சபையில் சேவைக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**12. பொது சுகாதாரம் பேணுதல்**
சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும்.

**13. சந்தை வியாபாரம் தொடர்பானது**
சந்தையில் உற்பத்திப் பொருட்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது 4% இற்கு மேற்படலாகாது. சந்தைச் சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**14. பொதுவழியின் பயன்பாட்டை இடையூறு செய்யும்வகையில் அலைந்து திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தல்.**
பொதுவழி மீது அல்லது பொது வழியின் அருகில் கால்நடைகளை கட்டுதல், அலைந்து திரிகின்ற வகையில் கால்நடைகளை விடுதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான குற்றங்களுக்காக பிடிக்கப்படும் கால்நடைகளை பிடித்தல், பராமரித்தல் செலவுகளுக்காக சபையால் காலத்துக்குகாலம் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை செலுத்த தவறின் அல்லது கால்நடைகளை உரிமைகோராது விடின் அவ்வாறான கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**15. டெங்குநோயை கட்டுப்படுத்தல்**
எமது பிரதேசத்தில் ஆட்கொல்லி நோயான டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்தும் ஓர் அங்கமாக சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களை துப்பரவாக வைத்திருக்குமாறு அதன் உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். இதனை மீறும் ஆதனங்களின் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

**16. ஒப்பந்தகாரரை பதிவு செய்தல்**
எமது சபையால் மேற்கொள்ளப்படும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் ரூபா 02 மில்லியன் தொகைக்கு உட்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் ரூபா 02 மில்லியனுக்கு தொகைக்கு மேற்பட்ட வேலைகளுக்கு தனியாகவும் எதிர்வரும் 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**17. பொலித்தீன் பாவனையை தடைசெய்தல்**
2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலுத்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் நடைவண்டி மூலம் உணவு விற்பனையில் ஈடுபடுபவர்கள் மேற்படி வர்தகமானி அறிவுறுத்தலை பின்பற்றுதல் வேண்டும்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

# 2020ஆம் ஆண்டுக்கான கடன் செலுத்தப்பட்டது!
## *பிரதமர் மஹிந்த தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 13
2020ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டுக் கடன்களை இலங்கை அரசு செலுத்திவிட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை கடும் கடன் நெருக்கடியில் உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்கட்சியினர் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். எனினும் தற்போதைய நிர்வாகம் கடன் விவகாரத்தினை சிறப்பாக கையாண்டுள்ளது. 2020ஆம் ஆண்டுக்கான கடன்களைச் செலுத்தி விட்டோம். வலுவான பொருளாதார திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாகவே இதனைச் செய்ய முடிந்தது. தேவையற்ற இறக்குமதிகளுக்குத் தடை தொடரும், தேவையற்ற வெளிநாட்டுக் கடன்களை இடைநிறுத்தவும் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ம-இ)

# ஐ.எஸ். ஆயுததாரிகள் இலங்கையில் இல்லை
## *இராணுவத் தளபதி மறுப்பு*



கொழும்பு, நவ. 13
ஐ.எஸ்.ஐ.எஸ் (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் மிகவும் ஆபத்தான உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என வெளியான தகவல்களை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது. பிரித்தானியாவின் சண் செய்தித்தாளில் வெளியான செய்தியை இராணுவத் தளபதி நிராகரித்துள்ளார். அவ்வாறானவர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.
ஐ.எஸ் அமைப்பின் மிகவும் ஆபத்தான உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என பிரிட்டனின் சண் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.
சிரிய, ஈராக்கில் தமது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட நிலங்களை ஐ.எஸ் இழந்த பின்னர் மிகவும் ஆபத்தான ஐ.எஸ் உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என சண் தெரிவித்துள்ளது. ஐ.எஸ் அமைப்பு தீவிரமாக செயற்படும் நாடுகளின் விபரங்களை வெளியிட்டுள்ள சண் இலங்கையும் அதிலொன்று எனக் குறிப்பிட்டுள்ளது.
ஐ.எஸ் அமைப்பு தனது சாம்பலில் இருந்து மீண்டும் எழுகின்றது. சர்வதேச அளவில் கொலைகள் மற்றும் குழப்ப நடவடிக்கைகளில் அந்த அமைப்பு ஈடுபடுகின்றது என சண் தெரிவித்துள்ளது. மொசாம்பிக்கின் வடபகுதியில் ஐ.எஸ் அமைப்பின் தாக்குதலில் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதை சண் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-இ)

# பேலியகொட மீன்சந்தையை மீண்டும் திறக்க நடவடிக்கை

## எதிர்பார்க்கப்படுகிறது இறுதிக்கட்ட பி.சி.ஆர்.

கொழும்பு, நவ. 13

ஊழியர்களின் இறுதி பி.சி.ஆர் அறிக்கையின் பின்னர் பேலியகொட மீன்சந்தையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பேலியகொட மீன்சந்தையில் பணிபுரியும் ஊழியர்களில் பலருக்குக் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டதை அடுத்து குறித்த மீன்சந்தை தற்காலிகமாக மூடப்பட்டது. அது மீண்டும் எப்போது திறக்கப்படும் என்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பேலியகொட மொத்த மீன் சந்தை தொகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த மாதம் இறுதியில் மீன்சந்தையைத் தற்காலிகமாக மூடிவிடத் தீர்மானித்தோம். கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஊழியர்கள் பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களில் பலருக்குத் தொற்று இல்லை என்பது தெரியவந்துள்ளது. எனினும் இறுதிக்கட்ட பி.சி.ஆர் அறிக்கைகளை எதிர்பார்த்திருக்கின்றோம். பி.சி.ஆர் முடிவுகளின் அடிப்படையில் சந்தை மீண்டும் திறக்கப்படும். முதல்கட்டமாக மொத்த வியாபாரிகளுக்காக சந்தை திறக்கப்படும். பின்னர் படிப்படியாக சில்லறை வியாபாரம் அனுமதிக்கப்படும் என்றார். (ம-இ)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. P.ஜெயக்குமார்
அவர்களின் அன்பு மாமனார்.

**கோணையா தியாகராசா**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி- 45 ரூபாய்
077 334 1281

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை

## இயக்கச்சி சந்தை வளாக கடைகள், இயக்கச்சி கோழியிறைச்சிக்கடைகள் ஒரு வருடகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- 13.11.2020 தொடக்கம் 30.11.2020 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- 30.11.2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- 30.11.2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம். |

**இறைச்சிக்கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கோழியிறைச்சிக்கடை | 61,500.00 | 5,000.00 | 2,000.00 |

**சந்தை வளாக கடைகளுக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS-03 | 15,000.00 | 3000.00 | 2000.00 |
| 02 | VS-04 | 15,000.00 | 3000.00 | 2000.00 |
| 03 | PS-04 | 30,000.00 | 3000.00 | 2000.00 |
| 04 | PS-06 | 24,000.00 | 3000.00 | 2000.00 |
| 05 | PS-07 | 24,000.00 | 3000.00 | 2000.00 |
| 06 | PS-08 | 21,000.00 | 3000.00 | 2000.00 |
| 07 | PS-09 | 21,000.00 | 3000.00 | 2000.00 |
| 08 | PS-10 | 21,000.00 | 3000.00 | 2000.00 |
| 09 | PS-11 | 19,200.00 | 3000.00 | 2000.00 |
| 10 | PS-12 | 19,200.00 | 3000.00 | 2000.00 |
| 11 | PS-13 | 19,200.00 | 3000.00 | 2000.00 |
| 12 | PS-14 | 19,200.00 | 3000.00 | 2000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப் பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 30.11.2020 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கடைகளின் கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக்கடையின் கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/2 பகுதியைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்தமாதம் 10 ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. VS-03, VS-04 ஆகிய கடைகள் மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/ செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன். 13.11.2020
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை
பளை.

**நினைவின் மடியில் ஆண்டுகள் ஐந்து**



**மூதறிஞர்**
**சி.சிவசரவணபவன் - சிற்பி**

எம் தோற்றச்
சுடரொளியாய்
28.02.1933

சொல்லாத
நுண்ணுணர்வாய்
09.11.2015

(திதி:ஐப்பசித் திரயோதசி 13.11.2020)

வாழும் இலக்கியங்கள் வைத்தெமக்குத் தான் இறைவன்
தாழடைந்தான் நாம் தவிக்கச் சென்று.

பிரிவால் துயருறும்

வைத்திய கலாநிதி
சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**அமரர் பற்குணராஜா மங்களேஸ்வரி**

தோற்றம்
10.03.1938

மறைவு
14.10.2020

கடந்த 14.10.2020 புதன்கிழமை எமது குடும்பத்தலைவி **அமரர் பற்குணராஜா மங்களேஸ்வரி** அவர்கள் இறைவனடி சேர்ந்த வேளையில் எமது துயர்நீக்க நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமக்கு உறுதுணையாய் நின்று உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், யா/அருணோதயக்-கல்லூரி சமூகத்தைச் சார்ந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் சபிண்டீகரண கிரியையும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் **இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை** அவரது இல்லத்தில் நடைபெறும்.

தற்போது நிலவும் கொரோனா சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு அழைக்க இயலாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.

"மங்களவில்லா"
உடுவில் கிழக்கு
சுன்னாகம்

குடும்பத்தினர்



# அருள்மிகு சபரிஜயப்பன் திருக்கோயில்

## சில்வா வீதி, வட்டக்கச்சி

அருள் மிகு சபரிஜயப்பன் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை 16.11.2020 அன்றைய தினம் ஐயப்பன் மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற இருப்பதனால் மாலை அணியும் அடியவர்கள் முற்கூட்டியே ஆலய நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு தங்கள் பெயரினை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சுவாமியே சரணம் ஐயப்பா!**

**ஆலய பரிபாலன**
**சபையினர்.**
**077 389 1969**

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமைபுரியும்
ஏ.சிவசங்கர் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கமலாதேவி ஏகாம்பரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள்.**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலை மருந்தாளர் ஏ.சிவசங்கர்
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கமலாதேவி ஏகாம்பரம்

அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**மருந்தாளர்கள்,**
**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

**மலர்வு: 26.05.2015** **உதிர்வு: 14.10.2020**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும்
கலைப் பீடத்தின் [illegible] துறையின்
முதுநிலை விரிவுரையாளருமான
**திரு.நவரத்தினம் பரந்தாமன்**
அவர்களது
அன்புப் புதல்வன்

### செல்வன்
### பரந்தாமன் துளசிமணி

அவர்கள் கடந்த 14.10.2020 அன்று இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருவதுடன் அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப் பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக**
**ஆசிரியர் சங்கம்**

## யாசகர்களால் கொரோனா அபாயம்

வவுனியா, நவ.13
வவுனியா நகர்ப்பகுதியில் யாசகம் பெற்று வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களால் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் உட்பட நகர் பகுதிகளின் சில இடங்களிலும், குடியிருப்பு குளத்தின் ஓரங்களிலும் குடும்ப சகிதமாக வருகை தந்து எந்தவிதமான சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் இவர்கள் தங்கி உள்ளனர். இதனால் கொரோனா வைரஸ் காவிகளாக இவர்கள் செயற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந -இ)

# நல்லூர் பிரதேச சபை
# கொக்குவில்
# 2021ம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தை, இறைச்சிக்கடைகள், என்பவற்றை 01.01.2021ம் திகதி தொடக்கம் 31.12.2021ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 13.11.2020-26.11.2020 வியாழக்கிழமை பி.ப 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 26.11.2020 வியாழக்கிழமை பி.ப 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 26.11.2020 வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : பயிற்சி மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

2021ம் ஆண்டுக்கான சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீள்கேள்வி கோரலில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 663,000.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 111,012.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 138,960.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,110,455.00 |
| 2 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 370,860.00 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 127,980.00 |
| 4 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 127,980.00 |
| 5 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,687,590.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 725,400.00 |

கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு.தா.தியாகமூர்த்தி
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்
13.11.2020

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
# பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
# மாதகல்
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 15 ஆதன இல :- 77/22 வீதி :- அம்பலத்துறை ஒழுங்கை கிராம சேவையாளர் பிரிவு :- J/144

எமது இடாப்பில் வட்டாரம் 15, அம்பலத்துறை ஒழுங்கை . ஆதன இல. 77/22 இல் P.நாகலிங்கம் எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி தற்போது வலிகாமம் தென்மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாகியப்பிட்டி இறை "அம்பிலாக்கை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 3, ஆனால் உத்தரவுபெற்ற உலாந்தா மு.இராசையாவால் 05.04.2014 இல் அளந்து தயாரித்த 1505 ஆம் இலக்கப்படத்தின் நில பர.3 குளி 3.63 கொண்ட ஆதனம் மாகியப் பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவப்பிரகாசம் ஹேமலதாஸ் மகள் பாமினி என்பவரால் மாகிப்பிட்டி அப்பிலாக்கை சண்டிலிப்பாய் சின்னத்துரை வரமூர்த்தி பெண் மாலா என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 10026ம் இலக்க 2014.05.18ம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகை (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் மு.இராசையாவால் 05.04.2014 இல் அளந்து தயாரித்த 1505 ஆம் இலக்கப்படத்தின் "அம்பிலாக்கை" நில பர.3 குளி3..63கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை வரமூர்த்தி பெண் மாலா எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும், என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.



திரு.அ.ஜெபநேசன்
தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.

*முதலாம் பக்கத் தொடர்ச்சி...*

## ஊஞ்சல்...

கோயில் வீதி நல்லூரைச் சேர்ந்த உஜிதன் சாதுரியா (வயது 7) என்ற பொஸ்கோவில் தரம் 2 இல் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டின் மாமரத்தில் ஊஞ்சல் தொங்கப்போட்டிருந்தது. கடந்த 3ஆம் திகதி கதிரையில் ஏறி ஊஞ்சலை கீழே இழுத்துள்ளார். ஊஞ்சல் அரைவாசி தொங்கிய நிலையில், ஊஞ்சல் கயிற்றில் கட்டியிருந்த முடிச்சை அவிழ்ப்பதற்கு முயன்றபோது கயிறு கழுத்தில் சுற்றியுள்ளது. இதன்போது கதிரையும் கீழே விழுந்ததால் ஊஞ்சல் கயிற்றில் சிறுமி தொங்கியுள்ளார்.

வீட்டார் விரைந்து செயற்பட்டு சிறுமியைக் காப்பாற்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ,26)

## சிறைக் கூரை மீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்

பழைய போகம்பர சிறைச்சாலைக் கூரைமீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறைக்கைதிகளின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இந்த சிறைச்சாலை ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு 800 க்கு அதிகமான கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் 30 கைதிகள் மற்றும் இரு அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் தங்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் உடனடியாக பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் எனக் கோரியே கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (வ-இ)

## விழிநீர் அஞ்சலி

தோற்றம் 1930 . 08 . 02



மறைவு 2020 . 11 . 12

### திரு. கோணையா தியாகராசா

(முன்னாள் பொருளாளர் - AROD)

எமது வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில்
1990-1996 காலப்பகுதியில் ஆயுட்கால அங்கத்தவராகவும்
1997-2020 வரை பொருளாளராகவும் பணியாற்றிய
**திரு.கோணையா தியாகராசா**
அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு மனவருத்தம் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,
(AROD)
திருநெல்வேலி.

## நீங்கா நினைவலைகளில் இரண்டாம் ஆண்டு

மலர்வு 08 . 01 . 1998



உதிர்வு 05 . 11 . 2018

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய பாச மகன்

### அமரர் சின்னத்தம்பி தர்சீலன்


வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப் பிள்ளையாக வாழ்ந்த வேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்.
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.
ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம்மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்

கோப்பாய் வடக்கு, பூதர்மடம். குடும்பத்தினர்.

## இலக்கத்தகடு இல்லாத மோ. சைக்கிளில் வந்து சங்கிலி அறுப்பு

வதிரியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தம்பதிகளிடம் இலக்கத்தகடு இல்லாத மோ. சைக்கிளில் வந்த இருவர் ஒரு பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ,26)

## மரண அறிவித்தல்



### செல்லப்பா இராஜேஸ்வரன்

(மகாஜனாக் கல்லூரி, St.Patricks கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனும், St Aloysius college, Royal college, Jaffna college மற்றும் Government Secondary School Nigeria இன் பழைய ஆசிரியரும்)

வீமன்காமம், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராஜேஸ்வரன் அவர்கள் (11.11.2020) புதன்கிழமை மல்லாகத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - பரம்சோதி குணபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அமலசோதியின் அன்புக் கணவரும், றாஜி, அரவிந்தன், சுமங்கலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பத்மசிறி மற்றும் பியூலா, சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், நித்தியா, காவியன், சமுத்திரா, Aiden, Jordan, Shaun, Trevin, Damian ஆகியோரின் அன்புப் பேரனும் ரமணியின் அன்பு மாமனும், தீபனா, தர்ஷனா, அஜந்தனா மற்றும் நிதர்ஷன் ஆகியோரின் பேரனும் மல்லிகா, காலஞ்சென்ற அஹிலாண்டேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஞானசோதி, ஜெயசோதி, காலஞ்சென்ற தேவசோதி மற்றும் நிர்மலசோதி, காலஞ்சென்ற சத்தியசோதி மற்றும் அருள்சோதியின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.11.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**றாஜி (மகள்) - +61438013751**
**சுமங்கலா (மகள்) - +447960542657**
**அருள்சோதி (மைத்துனர்) - 94775487334**
**ரமணி (பெறாமகள்) - 94767902530**

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 06 . 1961



இறப்பு 12 . 11 . 2020

### திருமதி தயானந்தன் புஸ்பராணி

புங்குடுதீவு 05ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 03ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயானந்தன் புஸ்பராணி அவர்கள் 12.11.2020 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமானந்தன் நாயகப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், தயானந்தன் (வேலணை பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும், விஜிதா, காலஞ்சென்ற கேசவன் மற்றும் பவித்ரா (பிரான்ஸ்), மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெனந்தன் (லண்டன்), பிரசன்னா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சாருஜனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தயானந்தன்
**077 577 2154**

தகவல்:
குடும்பத்தினர்.

## தீபாவளியை...

நல்லை ஆதீன குருமுதல்வர், ரிஷாத் தொண்ட சுவாமிகள், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கூட்டாக, யாழ்ப்பாணம் இந்து மாமன்றத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்கள்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

உலகம் முழுவதும் வாழ்கின்ற இந்து மக்களின் விழாக்களில் ஒன்றான தீபாவளி நாளை கொண்டாடப்பட இருக்கின்றது. இன்று உலகத்தை ஆட்டிப்படைக்கும் கொரோனா நோயால் சர்வதேசமே கலங்கி நிற்கின்ற வேளையில் நாங்கள் தீபாவளித் திருநாளை மிகவும் அமைதியாக வழிபாடாற்றி எந்தவொரு ஆடம்பரமுமின்றி பிரார்த்தனைக்குரிய நாளாக கருத வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கொரோனாவால் பலர் உயிரிழந்திருக்கின்றார்கள். இந்த வேளையில் இன்பத்திருநாளாகிய தீபாவளித் திருநாளை குடும்பத்தோடு கொண்டாடிக்கொள்ளுங்கள். உற்றார் உறவினர் வீடுகளுக்குச் செல்ல வேண்டும், கோயில்களுக்கு செல்ல வேண்டும், வேடிக்கையாக களிக்க வேண்டும் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து நிறுவனங்களும் இந்தக் கொடிய கொரோனா நோய் தொடர்பில் எச்சிக்கை செய்த வண்ணம் உள்ளனர்.

வடக்கிலே தீபாவளி தினத்தோடு, கேதார கௌரி விரதமும் இணைந்து வருகின்றது. அத்தினத்தில் ஆலயங்களில் கூடுவதைத் தவிர்த்து அமைதியாக வீடுகளிலே வழிபடுங்கள். தீபாவளி தினத்துக்கு அடுத்த நாள் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகின்றது. தீபாவளிக்கு அடுத்த 6 நாள்களும் வீடுகளில் இருந்து மனத்தால் இறைவனைத் தரிசியுங்கள், என்று கோரிக்கை விடுத்தனர். (ஒ.ரி4)

## கொரோனா சாவு...

கொழும்பு, நவ. 13

இலங்கையில் கொரோனாத் தொற்றால் நேற்றும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார். கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டு, கொழும்பு கிழக்கு, முல்லேரியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் இருவரே சாவடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். இலங்கையில் ஏற்கனவே 46 கொரோனா இறப்புகள் பதிவான நிலையில், நேற்று அறிவிக்கப்பட்டுள்ள 2 இறப்புகளுடன் இதுவரை 48 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளது.

**47 ஆவது சாவு**

கொழும்பு-12 இல் வசிக்கும் 54 வயதான ஆண். அவரது சாவுக்கான காரணம், நாட்பட்ட நுரையீரல் நோய் பிரச்சினையுடனான கொரோனாத் தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

**48 ஆவது சாவு**

மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஆண். அவரது சாவுக்கான காரணம், கொரோனா காரணமாக நியூமோனியா மற்றும் இரண்டாம் நிலை பக்டீரியா தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

**373 பேருக்கு தொற்று**

நேற்றும் 373 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் சிக்கிப் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 249 ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 723 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 5 ஆயிரத்து 22 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 10 ஆயிரத்து 653 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். (ஒ.22)

## களமிறங்கிய...

கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவுள்ளோம் என பொலிஸார் அறிவித்திருந்தனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில், இடம்பெறும் பயணங்களைக் கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பப் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக, தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வீடுகளை விட்டு வெளியேறி நடமாடியோர் ட்ரோன் உதவியுடன் அடையாளப்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.இ)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## கலைப்பீட...

வம் தொடர்பாக விசாரணைககளை மேற்கொண்ட தனிநபர் ஆயத்தால் 130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் சம்பவத்தில் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டுள்ள மாணவர்களுக்கு மிக உயர்ந்த தண்டனை பரிந்துரைக்கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பல்கலைக்கழகப் பேரவையால் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆயத்தின் தலைவர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரத்தால் இந்த விரிவான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான அறிக்கை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு, விசாரணை அதிகாரியால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் பேரவைக்கான பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை முன்வைக்கப்படும். பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் சம்பவம் தொடர்பாகப் பேரவையால் இற்றைப்படுத்தப்படும் தீர்மானம் துணைவேந்தரால் நடைமுறைப்படுத்தப்படும் என்று பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது. (ஒ.5)

## விடுதலைப் புலிகள்...

றுத்தியுள்ளது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்வது தவறானது என்று அந்த நாட்டு நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனாலும் பிரிட்டன் அரசு இதுவரை தடையை நீக்கவில்லை. இந்த நிலையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சும் தடை நீக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்று இந்தியாவும் வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ ஆகியோரின் படுகொலைகளுக்கு புலிகளே காரணம் என்று இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.ம.இ)

## மன்னார் மாவட்ட....

16ஆம் திகதி திங்கட்கிழமை தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் 1995 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மன்னார் கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளராகவும், மன்னார் பிரதேச செயலராகவும், மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகவும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மேலதிக செயலராகவும், வட மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளராகவும் கடமையாற்றி உள்ளார். போர் சூழ்நிலையான கால கட்டத்திலும், திடீர் அனர்த்த பாதிப்புக்கள் மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இரவும் பகலும் அயராது பாடுபட்டார். அரச பணிகளுக்கு அப்பால் மனிதநேயத்துடனும் சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.56)

## தமிழ்க் கட்சிகள்...

னர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளின் தலா ஒரு உறுப்பினர்களுமாக 17 உறுப்பினர்கள் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றின் ஆதரவுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்தச் சபையில் ஆட்சியமைத்திருந்தது.

பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு நேற்று சபையில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன ஒன்றுசேர்ந்து அவற்றின் 9 உறுப்பினர்கள் இணைந்து வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து அதைத் தோல்வியடையச் செய்தனர். வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 7 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சபைக்குச் சமூகமளிக்கவில்லை.

இதேவேளை தவிசாளர் மீண்டும் ஒரு தடவை வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியும். அதிலும் தோல்வியடைந்தாலே அவர் பதவி விலக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.ப.18)

## கொரோனா சாவு 05 பேர்...

வும், ஏனையவை நாள்பட்ட நோய்களால் நிகழ்ந்துள்ளன எனவும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். சுகாதார அமைச்சின் செயலர் இதனை உறுதிப்படுத்தினார் எனவும் அவர் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஊரடங்கு மற்றும் முடக்கல் நிலைகளின்போது வீடுகளில் தங்கியிருக்காது தேவையானபோது மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். இலங்கையில் ஒரு சிறந்த சுகாதார சேவையுள்ளது. இதனை யாரும் மறுக்கவோ அல்லது மருத்துவ சிகிச்சை பெறுவதைத் தவிர்க்கவோ கூடாது.

முடக்கல் நிலையில் இருக்கும்போது கூட அவசர மருத்துவ சேவைகள் தேவைப்படுவோர் அம்புலன்ஸில் மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய ஒரு பொறிமுறையை நாங்கள் நிறுவியுள்ளோம்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட அனைவருமே இறந்துவிடமாட்டார்கள் என்பதை பொதுமக்கள் நினைவில் கொள்ள வேண்டும், என்றார். (ஒ.22)

## பூஸா சிறைக்குள்ளும்...

குருவிட்ட சிறைச்சாலைகளில் ஏற்கனவே கைதிகள் மற்றும் சிறை அலுவலர்களுக்குக் கொரோனா உறுதியான நிலையில் நேற்று பூஸா சிறைச்சாலை கைதிகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய சிறைச்சாலைக் கொத்தணியில் நேற்று வரை கைதிகள் உள்ளிட்ட 161 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இதுவரை 115 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பெண் கைதிகள் 92 பேருக்கும், ஆண் கைதிகள் 20 பேருக்கும், சிறைச்சாலை அலுவலர்கள் 3 பேருக்கும் வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. போகம்பர சிறைச்சாலை, மாத்தறை சிறைச்சாலை, குருவிட்ட சிறைச்சாலை மற்றும் பூஸா சிறைச்சாலை ஆகியவற்றில் இதுவரை 46 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ.22)

## உணவருந்திய...

யாகப் பெய்த மழை காரணமாகசுவர் இடிந்து வீழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டமான்நகர் பகுதியிலேயே நேற்று நண்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவருந்திக் கொண்டிருந்தபோதே சிறுவன் மீது சுவர் வீழ்ந்துள்ளது. பின்னர் அயலவர்களின் உதவியுடன் சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிறுவன் உயிரிழந்தான். (ஒ.ம.6.214.ரி2)

## கடன் பொறிக்குள்...

அரசு சர்வதேச கடன்களை சமாளிக்க அமெரிக்காவிடம் இருந்து ஒரு பில்லியன் டொலரையும் சீனாவிடம் இருந்து ஒரு பில்லியன் டொலரையும் பெற்றுக்கொள்ளவுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இந்தியாவிடம் இருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக் கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 2020ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# வடக்கில் முறைகேடான நடவடிக்கைகள்; உடன் நிறுத்தாவிடின் பெரிய விபரீதங்கள்

## அரசுக்கு கஜேந்திரன் எம்.பி. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

**வடக்கு மாகாணத்தில் முறைகேடான செயற்பாடுகளை அரசு உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் விபரீதங்களை அரசு சந்திக்கவேண்டி வரும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டு சட்ட வரைவு விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் நானும், எமது கட்சியின் தலைவரும் திருகோணமலைக்குச் சென்று மக்களின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியிருந்தோம். இந்தக் கலந்துரையாடல் பற்றி பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது கட்சியின் முக்கியஸ்தர்கள் கந்தளாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரிக்கப்பட்டுள்ளனர். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் 32 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து அச்சுறுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஜனநாயகத்துக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கடந்த தேர்தல் காலத்தின்போது பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்ந்தவர்கள் மற்றும் மொட்டுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இவ்வாறான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. வெளிநாடுகளில் படித்துவிட்டு வந்தவர்களுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறையில் இவ்வாறு வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட ஒருவரின் பதவி கடந்த ஓகஸ்ட் மாதம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் உள்ள பட்டியலில் அவரின் பேர் இருந்தது என்றும், பின்னர் வந்த பட்டியலில் அவரின் பெயர் இல்லை என்றும் கூறி அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இதுபோன்று 600க்கும் அதிகமானவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துத் திணைக்களத்தில் தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். தேர்தல் காலத்தில் அரசுக்கு சார்பாகப் பணியாற்றியவர்கள் பதவியில் இணைக்கப்படுகின்றனர்.

இரண்டு அரசுகளும் மாறி மாறி இவ்வாறு செய்கின்றன. இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற வட மாகாண போக்குவரத்துச் சபையானது சீரழிந்து வருகின்றது. ஏதாவது விபத்தொன்று இடம்பெற்றால் இதற்கான தீர்ப்புக்காக சம்பந்தப்பட்ட சாரதிகள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றனர். ஏனைய மாகாணங்களில் அவ்வாறு இல்லை.

வடமாகாணத்தின் கல்வி நிலைமை மோசமாகியுள்ளது. கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு ஒன்றைச் சேர்ந்த வட பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் ஆக்குகின்றோம் என்ற போர்வையில் பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லும் நிலைமைகள் காணப்படுகின்றன. இது திட்டமிட்ட செயற்பாடாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்கள் உள்ளிட்ட வசதிகள் எதனையும் வழங்காது பாடசாலைகள் தாமாகவே மத்திய அரசின் கீழ் செல்வதற்கான சூழல்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள முன்பள்ளிகளுக்கு வசதிகள் எதுவும் இல்லை. இவ்வாறான நிலையில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் முன்பள்ளிகளை அமைத்து ஆசிரியர்களுக்குச் சம்பளங்களை வழங்கி அவற்றை நிர்வகித்து வருகின்றது. மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள விடயம் வேண்டும் என்றே சீரழிக்கப்படுகின்றது.

இந்த மாதிரியான முறைகேடான செயற்பாடுகளை தமிழர் தாயகமான வடக்கில் அரசு நிறுத்த வேண்டும். போரால் அழிக்கப்பட்ட வடபகுதியில் எந்தவித அபிவிருத்திக்கும் 2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் அரசு பாரிய தோல்வியையும் விபரீதங்களையும் சந்திக்கும், என்றார். (ஒ-22)

# கொழும்பில் மேலும் பல கொத்தணிகள்

### பேரச்சமான நிலைமை உள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ. 13

கொழும்பில் மேலும் சில கொரோனாக் கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நூற்றுக்கு 5 பேருக்கு வைரஸ் தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்பகுதியில் 30 ஆயிரம் வரை தொற்றாளர்கள் இருக்கக்கூடும். ஆகவே கொழும்பில் மேலும் சில கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.

அதுமட்டுமல்ல நாட்டில் தற்போது 15 ஆயிரம் வரையானோருக்கே வைரஸ் தொற்றியுள்ளது எனக் கூறப்பட்டாலும் உரிய வகையில் பரிசோதனை நடத்தினால் அத் தொகை மேலும் அதிகரிக்கக் கூடும்.

அதேவேளை, கொரோனாவால் உலகளவில் 12 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். உலகில் தொற்று நோயினாலோ அல்லது போராலோ ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் பெருமளவானோர் உயிரிழந்த சந்தர்ப்பம் இதுவாகும். எனவேதான் கொரோனா குறித்து மேலும் அவதானம் தேவை என வலியுறுத்தப்படுகின்றது, என்றார். (ஒ.-ம.-44)

# ஜனாஸா எரிப்பால் முஸ்லிம்கள் அச்சம்; சரியான தீர்வை வழங்க வேண்டும் அரசு!

## சபையில் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 13

கொரோனா நோய்த்தொற்றால் வீடுகளில் இறந்தால் எந்தவித மத அனுஷ்டானமுமின்றி எரிக்க நேரிடும் என்று கூறி சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மக்களைப் பீதி அடையச் செய்து வருகின்றார்.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை எரிப்பது தொடர்பில் முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினையுள்ளது. இது தொடர்பில் சாதகமான முடிவை வழங்க வேண்டும் என்று அரசிடம் தாழ்மையாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். விஞ்ஞானபூர்வமான எந்த அடிப்படையும் இன்றி சுகாதார அமைச்சு பல்வேறு காரணங்களை முன்வைத்து வருகின்றது. முஸ்லிம்களின் மத விவகாரத்துடன் தொடர்புள்ள இந்த விடயத்துக்குத் தீர்வு வழங்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டு சட்டமூல விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற வரலாற்றில் முதன் முறையாக ஒரே வருடத்தில் இரு இடைக்காலக் கணக்கு அறிக்கைகளையும் நிதி ஒதுக்கீட்டு சட்டமொன்றையும் சமர்ப்பிக்கின்றோம். இதன் சட்டபூர்வதன்மை குறித்து விவாதித்துள்ளோம். மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் ஆராயப்பட்டு நீதிபதிகள் காரணம் கூறாது வழக்கை இரத்துச் செய்தனர். இது சட்டவிரோதமான செயற்பாடு என்பதால் இதனை எதிர்க்கின்றோம். நாம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளமாட்டோம். எந்த அரசும் இவ்வாறான தவறைச் செய்யக்கூடாது.

எதிர்க்கட்சியினர் சர்வதேச முதலீட்டாளர்களைச் சந்தித்து இங்கு முதலீடு செய்ய வேண்டாம் என்று கோரியுள்ளன என அரச தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. அது முற்றிலும் தவறான குற்றச்சாட்டு. எதிரணியில் யாரும் அவ்வாறு செய்யவில்லை.

நாடு பாரிய கடன்பொறியில் சிக்கியுள்ளது. வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த அடுத்த வருடத்தில் 6 பில்லியன் டொலர் தேவைப்படும். இதனை எவ்வாறு ஈட்ட முடியும்?

எமது அரசு செய்த சில நடவடிக்கைகளினால்தான் கையிருப்பில் இருந்து ஒரு பில்லியன் டொலர் செலுத்த முடிந்தது. கடன் முகாமைத்துவ சட்டத்தை 2018இல் நிறைவேற்றியதால் இது வாய்ப்பாக அமைந்தது. அரசுக்கு எதிர்காலத்தில் சர்வதேச தடைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் -என்றார். (ஒ-22)

# ஒதுக்கீட்டு சட்டம் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

கொழும்பு, நவ. 13

நாடாளுமன்றத்தில் 2020 ஒதுக்கீட்டு சட்டவரைவின் மூன்றாவது வாசிப்பு திருத்தங்களுடன் நேற்று நிறைவேற்றப்பட்டது. சட்டவரைவு வாக்கெடுப்புக்கு விடப்படாமல் நிறைவேற்றப்பட்டது.

2020 ஒதுக்கீட்டு சட்டவரைவின் மூன்றாவது வாசிப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று வழங்கப்பட்டது. எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் 2021 வரவு செலவு திட்டம் முன்வைக்கப்படும். (ஒ-இ)

# ஆஸி. தொடருக்கு ரசிகர்கள் அனுமதி

புதுடில்லி, நவ.13
இந்தியா-ஆஸ்திரேலியா கிரிக்கெட் தொடரை நேரில் கண்டுகளிக்க ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரு அணிகள் இடையேயும் 3 ஒருநாள், மூன்று ரி-20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டித் தொடரில் உள்ளூர் மாநில அரசின் வழிகாட்டுதலுக்குத் தகுந்தபடி ரசிகர்கள் போட்டியை நேரில் கண்டு களிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

கொரோனாப் பாதிப்பு காரணமாக கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் கிரிக்கெட் போட்டியை நேரில் கண்டு களிக்க ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல்முறையாகும்.

ஒருநாள் மற்றும் ரி-20 போட்டித் தொடரில் அரங்கின் மொத்த இருக்கை வசதியில் 50 சதவீத ரசிகர்களையும், முதலாவது மற்றும் 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கு 50 சதவீத ரசிகர்களையும், 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கு 25 சதவீத ரசிகர்களையும், 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டிக்கு 75 சதவீத ரசிகர்களையும் அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி டெஸ்ட் போட்டிக்கு தினசரி சுமார் 25 ஆயிரம் ரசிகர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். (ற-இ)

## மரண அறிவித்தல்



### உஜிதன் சாதுரியா (சாது)

(தரம்-02, யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

பிறப்பு 26.07.2013 — இறப்பு 12.11.2020

கோவில் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட உஜிதன் சாதுரியா (சாது) நேற்று (12.11.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் உஜிதன் (நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA), யாழ்ப்பாணம்), டினோ ஜொவிற்றா தம்பதியரின் அன்பு மகளும், காருண்யா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) சாத்வீகா ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற கந்தவனம் (வேலணை) மற்றும் சறோஜினிதேவி, டோமினிக், ஜெயமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரவிச்சந்திரன் (நோர்வே), ரவிசங்கர் (கனடா), ரவிச்செல்வன் (கனடா), ஜொய்சி, டிசி (நெதர்லன்ட்), மேளின் (கிராம அலுவலர், J77, மருதடி), கௌரி (நோர்வே), கிருபாநிதி (கனடா), கோகிலா (கனடா), எட்மன் ஜெயக்குமார், நிஷாந்தன் (நெதர்லன்ட்), ஜூட்ஜெயக்குமார் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெறாமகளும், அன்ட்றுஜஸ்ரின் (பிரான்ஸ்), காயத்ரி (கனடா), சிறோமா (பிரான்ஸ்), குணசீலன் (கனடா) ஆகியோரின் மருமகளும், கௌசிகன், நிலா, பிரவீன், நீருஜா, தேனுஜா, மிதுஷா, தர்மிதா, காருஷா, ஜெனுக்ஷி, நிதின், சயானா, ஜெமேக்ஷா, ஷெர்விக் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், அட்றியான், அனனியா, அன்சிகா, அஸ்வின், தாமிரா ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (13.11.2020) பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, சாட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

435/18, கோவில் வீதி, நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்.
077 716 1955

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நீர்வேலி மேற்கு கரந்தன் குறுக்கு றோட் (ராசா கடை அருகாமையில் 2 பரப்பு காணி உள்ளது. ஊரெழு ஆனந்த கானம் 44 பரப்பு காணி உள்ளது. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 805 1655

**Clerk தேவை (பெண்)**

இருபாலையில் இயங்கி வரும் எமது கல்வி நிறுவனத்திற்கு Clerk தேவை.
077 268 0298

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவில் 1 1/2 பரப்புக் காணி உள்ளது. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 623 4204

**காணி விற்பனைக்கு உண்டு**
**வீடு விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோயில் சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. 2 பரப்பு காணியுடன் வீடும் உள்ளது. தரகர் தேவையில்லை.
தொடர்பு: குரு
076 6400 974, 077 805 1655

**தேவை**

சித்திர ஆசிரியை
பிறநாட்டில் வாழும் ஆறு வயது பெண்பிள்ளைக்கு Zoom மூலமாக சித்திரம் கற்பிக்கும் ஆசிரியை தேவை. ஆங்கிலம் பேசக்கூடியவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
078 486 1254

## மரண அறிவித்தல்

### திரு.கோணையா தியாகராசா



தோற்றம் 29.07.1930 — மறைவு 12.11.2020

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கோணையா தியாகராசா ( ஓய்வுபெற்ற பிரதம தபால் அத்தியட்சகர், அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் பொருளாளர்-இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முன்னாள் பிரதித் தலைவர்- புனித சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம், முன்னாள் பொருளாளர்- AROD, முன்னாள் தலைவர் - கொய்யாத்தோட்ட சனசமூக நிலையம், தலைவர்- சுண்டிக்குளி தெற்கு ஐக்கிய நாணய சங்கம், தலைவர்- கொய்யாத்தோட்ட சேமிப்புக்கழகம், தலைவர் - கொய்யாத்தோட்ட சமூக அபிவிருத்தி மன்றம், தலைவர்- J/66 முதியோர் சங்கம், UPTORA Patron - Union of post and telecommunication officers retired association) அவர்கள் 12.11.2020 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணையா மரகதம் தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரெட்ணாம்பாளின் அன்புக் கணவரும், ஜெகநாதன் (முன்னாள் பொறியியலாளர்-மட்டக்களப்பு மாநகரசபை, UK), ஜெயராணி, குகதாசன் (Business, Colombo), ஜெயக்குமார் (முன்னாள் மேற்பார்வையாளர், K.K.S Cement Factory, France), ஜெயசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வநாயகி (முன்னாள் உத்தியோகத்தர்- யாழ் மாநகரசபை, UK), சின்னையா (ஓய்வுபெற்ற லிகிதர், K.K.S Cement Factory), கீத்தா (Retired Personal Assistant - Ministry of Foreign Affairs), சந்திரகுமாரி (France), ஜெயக்குமார் (Teacher -St' Patrick's College, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகாதேவி, புனிதவதி (France), காலஞ்சென்ற இராமநாதன், Dr.பூலோகநாதன் (UK), காலஞ்சென்ற கைலைநாதன், பாலாம்பிகை (UK) ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீ சஜனா- ராஜராஜன் (Engineer-UK), ஸ்ரீகுகனியா-ஜேம்ஸ் (UK), Dr. நிலக்ஷன் (UK), நிலானி- நிசான் (Business), நிசாந்தன் (Accountant, Australia)-அபர்ணா (Business,Australia), நிசாந்தினி (Engineering Assistant, Waterboard)-அருள்குமரன் (Engineering Assistant, Waterboard), விஷ்னி (Senior Business Analyst, Commonwealth Bank, Australia)-அமிர்த்தன் (Business Development Manager- Digital Armour, Australia), கவித்திரா (Accountant, France)- துஷியந்தன் (Accountant, France), மயூரி (Engineer, U.K)-ரதீபன் (Engineer, U.K), கஸ்தூரி (Assistant Lecturer - Faculty of Agriculture, University of Jaffna) ஆகியோரின் பேரனும், சங்கவி, கிரிசாந்த், ஜஸ்மின், ஜெசிக்கா, தரஞ்சன், கெஷ்வின், நிர்த்துலா, சுவராகினி, சாகித்தியன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பிற்பகல் 2:00 மணிக்கு துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 6896 / 077 332 4646 / 077 618 4646 / 077 677 9274



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.